# தமிழில் உரைநடை

## உரையாசிரியர்கள் (கி.பி.8-16)

நூலாசிரியரின் அரிய கருத்துகளை எல்லாம் உரையாளர்
உதவியாலேயே உலகம் உணர்ந்து இன்புறுகின்றது.
பேருபகாரிகளாகிய உரையாசிரியர்களின் உதவி
இல்லையாயின், பண்டை உயர் நூல்களாம் கருவூலங்களில்
தொகுத்துவைத்த விலை வரம்பில்லாப் பொருள்மணிக்
குவியல்களை யாம் எங்ஙனம் பெறுதல் கூடும்?'

★ என்று உரையாசிரியர்களின் சிறப்பினைப் பண்டிதமணி. மு. கதிரேசனார் எடுத்துரைக்கின்றார். உரையாசிரியர்களின் உதவியாலேயே உரைநடை வடிவம் உயிருடன் உலவி வந்தது. உரையாசிரியர்களின் பணிகுறித்து

1. உரையின் தொன்மை
2. இலக்கண உரையாசிரியர்கள்
3. இலக்கிய உரையாசிரியர்கள்
4. சமய இலக்கிய உரையாசியர்கள்
5. பாட்டியல் உரையாசிரியர்கள்
6. சாசனத் தமிழ் உரைநடை
7. இடைச்செருகல் உரைகள்
8. உரையாசிரியர்களின் உரை மரபுகள் என்னும் பகுப்பில் காணலாம்.

**உரையின் தொன்மை**

**தொன்மைதானே**
**உரையொடு புணர்ந்த பழமை மேற்றே**

என்னும் தொல்காப்பிய நூற்பா (செய்: 238) உரையாசிரியர்களின் உரைக்கு முன்னோடியாகத் திகழ்கின்றது. மேலும்,

(1) பாட்டிடை வைத்த குறிப்பு
(2) பாவின்றெழுந்த கிளவி
(3) பொருளொடு புணராப் பொய்ம்மொழி
(4) பொருளொடு புணர்ந்த நகைமொழி

★ என உரைநடை 4 வகைப்படும் எனத் தொல்காப்பியர் வரையறுத்துள்ளார். பெருந்தேவனார் பாரதமும், தகடூர் யாத்திரையும், சிலம்பும் **'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்'** வகையைச் சேர்ந்தவை ஆகும். இலக்கியங்கள், இலக்கணங்கள் சமய இலக்கியங்கள் முதலானவற்றிற்கு உரையாசிரியர்கள் எழுதிய உரைகள் ஒரு புதுவகை உரைநடையைத் தோற்றுவித்து வளர்த்தன.

## (II) இலக்கண உரையாசிரியர்கள்

### 1. நக்கீரர் (கி.பி.8(அ)9): (உரை வழிகாட்டி)

☞ இன்று கிடைக்கும் உரையாசிரியர் உரைகளுள் **நக்கீரர் உரை தொன்மை**யானது. இவர் **இறையனார் களவியல் நூலுக்கு உரை** வகுத்துள்ளார். இவரது உரையின் சிறப்பால் நக்கீரர் உரை வழிகாட்டி எனப்போற்றப்படுகின்றார். இவரது உரை எதுகை, மோனைச் சிறப்பு மிகுந்து காணப்படுகின்றது.

**'கருவமைந்த மாநகர்க்கு உருவமைந்த வாயில் மாடம் போலவும்,**
**தகைமாண்ட நெடுங்சுவர்க்கு வகைமாண்ட பாவை போலவும்'**

☞ (இறை 1, உரை. ப: 2) என்னும் பகுதியால் இதனை அறியலாம். மூன்று சங்கங்களைப் பற்றிய குறிப்புகள் இவரது உரையில் இருந்தே முதன் முதலில் பெறுகின்றோம். மேலும், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை, அகத்தியம், வெண்டாளி, வியாழமாலை முதலான பல நூல்கள் இருந்தமை இவரது உரையால்தான் தெரியவந்துள்ளன.



FUTURE VISION

## 2. இளம்பூரணர்(கி.பி.12): (உரை முதல்வர்)

சமணர், தொல்காப்பியம் முழுமைக்கும் உரை வகுத்துள்ளார். **உரை முதல்வர்** எனப் போற்றப்படும் திறம் மிக்கவர்

**செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்**
**அறிவும் அருமையும் பெண்பா லான**

என்னும் தொல்காப்பிய (பொருள்: 206) நூற்பாவிற்கு இளம்பூரணாரின் உரை பொருள் விளக்கம் மிக்கதாக உள்ளது.

1. செறிவு→ என்பது அடக்கம்,
2. நிறைவு→ என்பது அமைதி.
3. செம்மை→ என்பது மனங்கோடாமை.
4. செப்பு → என்பது சொல்லுதல்
5. அறிவு → என்பது நன்மை பயப்பனவும் தீமை பயப்பனவும் அறிதல்.
6. அருமை→ என்பது உள்ளக் கருத்தறிதலருமை

என்னும் உரை விளக்கத்தின் மூலம் இதனை அறியலாம்.

## 3. சேனாவரையர் (கி.பி.13): (உரைச் செம்மல்)

தென்பாண்டி நாட்டைச் சேர்ந்தவர். தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை எழுதியுள்ளார். **வடநூற் கடலை நிலைகண்டுணர்ந்த சேனாவரையர்** எனச் சிவஞான முனிவர் இவரைப் பாராட்டுவார். **பூர்வ மீமாம்சை, ஐந்திரம் என்னும் நூல்களிலும் தேர்ச்சி** மிக்கவர். கிளவியாக்கம் என்பதனை விளக்கும்பொழுது **'நொய்யும் நுருங்கும் களைந்து அரிசி அமைத்தாரை ஆக்கினார் என்பவாகலின்'** என விளக்குகின்றார். சேனாவரையர் உரை தோன்றியபின் அதற்குமுன் வழங்கிவந்த இளம்பூரணர் உரை, செல்வாக்கு இழந்தது. ஆயின **இன்றுவரை தமிழ் மாணாக்கர்களால் சேனாவரையர் உரை பயிலப்பட்டு வருகிறது**. இவர் **சொல்லுக்குச் சேனாவரையர். உரைச் செம்மல்** எனப் போற்றப்படுகிறார்.

## 4. பேராசிரியர் (கி.பி.13): (உரை முனைவர்)

தொல். பொருளதிகாரம் முழுமைக்கும் உரை எழுதியுள்ளார். **பொருளொடு புணராப் பொய்ம்மொழி**என்னும் தொல்காப்பியப் பகுதிக்கு,

ஓர் யானையும் குரீஇயும் தம்முள் நட்பாடி. இன்னுழிச் சென்று
இன்னவாறு செய்தன என்று அவற்றுக்கு இயையாப்
பொருள்படத் தொடர்நிலையால் ஒருவனுழை ஒருவன் கற்று
வரலாற்று முறையால் வருகின்றன'

எனத் தெளிவுபடுத்துகின்றார். இவரது உரைச்சிறப்பால் **உரைமுனைவர்** எனப் போற்றப்படுகின்றார்.

## 5. நச்சினார்க்கினியர் (கி.பி.14): (தமிழ்மல்லி நாதசூரி)

➢ **உச்சிமேற் புலவர் கொள்ளும் நச்சினார்க்கினியர் எனப் பாராட்டப்படுபவர். தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, குறுந்தொகை (20 செய்யுட்கள்), சீவக சிந்தாமணி** எனப் பலநூற்களுக்கு உரை காண்பவர்.

இவர் ஒருவரே பல்லும் நாவும் போல இலக்கண உரையாசிரியராகவும்
இலக்கிய உரையாசிரியராகவும் இணைந்து விளங்கும் பெருமகன்

**என வ. சுப. மாணிக்கம்** பாராட்டுகின்றார். சைவரான இவர்சீவக சிந்தாமணிக்கு உரைகண்டு சமணரானார். இவரது உரை வடமொழிப் பேருரையாசிரியனாகிய மல்லசூரியை ஒப்ப இவரது உரை காணப்படுவதால் **தமிழ்மல்லி நாதசூரி** எனச் சுட்டப்படுகிறார்.

## 6. தெய்வச்சிலையார்:

➢ **தொல்காப்பியம் சொல்லதிகாரத்திற்கு உரை** எழுதியுள்ளார். சேனாவரையருக்குப் பிற்பட்டவர்.

FUTURE VISION

### 7. கல்லாடர்:

➢ தொல்காப்பியத்திற்கு உரை கண்டுள்ளார். காலத்தால் பிற்பட்டவர், தனக்கு முற்பட்ட **பல உரையாசிரியர்களின் மேற்கோள்களைத் தனது உரை**யில் எடுத்தாண்டுள்ளார்.

### 8. நன்னூல் உரையாசிரியர்கள்:

➢ பவணந்தி முனிவர் எழுதிய நன்னூலுக்கு முதன்முதலில் **மயிலைநாதர் உரை** எழுதினார். **சங்கர நமசிவாயர்** சைவமணம் கமழ நன்னூல் உரை கண்டார். இவ்வுரைக்குச் **சிவஞானமுனிவர்** பல திருத்தங்களைச் செய்து விருத்தியுரை வெளியிட்டார். எளிய முறையில் **ஆறுமுக நாவலர், விசாகப் பெருமாள் ஐயர்** இருவரும் நன்னூலுக்குக் காண்டிகையுரை செய்தனர்.

### 9. பிற இலக்கண உரையாசிரியர்கள்:

➢ வீர சோழியத்திற்குப் பெருந்தேவனாரும் யாப்பருங்கலக் காரிகைக்குக் குணசாகரரும், நம்பியகப்பொருளுக்கு நூலாசிரியராகிய நாற்கவிராச நம்பியும், புறப்பொருள் வெண்பா மாலைக்குச் சாமுண்டிதேவ நாயனாரும் உரையெழுதி உள்ளனர்.

## (III) இலக்கிய உரையாசிரியர்கள்

### 1. அரும்பத உரையாசிரியர்:

- சிலப்பதிகாரத்தின் அரிய சொற்களுக்கும் ஆழமான உரை வகுத்ததால் இப்பெயர் பெற்றார். **சிலம்பின் உரையாசிரியர்களுள் முற்பட்டவர்.** இவரது உரையைத் தழுவியே அடியார்க்கு நல்லார் உரையெழுதினார்.

### 2. அடியார்க்கு நல்லார் (கி.பி.13): (உரைத் தென்றல்)

- அடியார்க்கு நல்லாருடைய உரைநடை சிற்சில இடத்து எதுகை மோனை முதலியவற்றோடு கூடி இனிய சுவை பயந்து செய்யுள் நடையாக அமைந்துள்ளது என்று உ.வே.சா. பாராட்டுகின்றார். புகார்க் காண்டத்தில் கானல்வரி தவிர ஏனைய பகுதிகளுக்கும், மதுரைக் காண்டத்தில் ஊர்சூழ் வரி வரையிலும் உரை வகுத்துள்ளார். வஞ்சிக்காண்டத்திற்கு முழுமையாகவே உரை எழுதவில்லை. இவருக்கு, **நிரம்பையர் காவலன், உரைத்தென்றல்** என்னும் சிறப்புப் பெயர்கள் உள்ளன.

### 3. பரிமேலழகர் (கி.பி.13): (உரைத் தென்றல்)

- **திருக்குறள் முழுமைக்கும் உரை** வகுத்துள்ளார். இவர் திருக்குறள் முழுமையும் பலமுறை நுண்மையாகக் கற்று ஆழ்ந்து சிந்தித்து முன்பின் முரண்பாடின்றி மயக்கமில்லாதபடி ஒரு நோக்கில் வைத்து உரை எழுதுவது மிகவும் சிறப்பானது என்று **அறிஞர் மு. அருணாசலம்** போற்றுகின்றார். **திருமேனி காரி இரத்தின கவிராயர்** என்பவர் பரிமேலழகர் உரையின் சிறப்பான கருத்துக்களை விளக்கி **நுண்பொருள்மாலை** என்னும் நூலை எழுதியுள்ளார். பரிமேலழகர் உரையின் சிறப்பான கருத்துக்களை விளக்கி நுண்பொருள்மாலை என்னும் நூலை எழுதியுள்ளார். பரிமேலழகர் **பரிபாடலுக்கும் உரை** வகுத்துள்ளார். உரையாசிரியர்களுள் **உரை இளவரசர்** எனப் போற்றத்தக்க சிறப்பு மிக்கவர் என்று **செக்கோஸ்லோவேகிய அறிஞர் கமில்சுவலபில்** பாராட்டுகிறார்.

## பிற இலக்கிய உரைகள்

❖ **நச்சினார்க்கினியர்** பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவக சிந்தாமணி ஆகிய நூல்களுக்கும் குறுந்தொகையில் 20 பாடல்களுக்கும் உரை எழுதியுள்ளார். **மறைமலையடிகள்** முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை ஆராய்ச்சி உரைகள் குறிப்பிடத்தக்கன. **பேராசிரியரும் உ.வே.சாவும்** குறுந்தொகைக்கு உரை எழுதியுள்ளார்.

## (IV) சமய இலக்கிய உரையாசிரியர்கள்

### 1. வைணவ சமய உரையாசிரியர்கள் (14 (அ) 15 நூற்):

❖ வைணவ சமய உரையாசிரியர் நாதமுனிகள் அருளிய நாலாயிர திவ்வியப்பிரபந்தத்திற்கு எழுதிய உரைகள் 'வியாக்கியானங்கள்' எனப்படுகின்றன. இவை அனைத்தும் மணிப்பிரவாள நடையில் அமைந்துள்ளன. இவற்றுள் படி என்பது கிரந்தங்களைக் (எழுத்துக்கள்) குறிக்கும். ஒரு கிரந்தம் என்பது ஒற்றெழுத்துக்கள் நீங்கிய 32 எழுத்துக்களால் ஆனது.



FUTURE VISION

## 2. சைவ சமய உரையாசிரியர்கள்:

❖ சைவ சமயத்தைப் பொறுத்தவரையில் பன்னிரு திருமுறைகளுக்கு உரை எழுதக் கூடாது' என்னும் கொள்கை சைவரிடையே நிலவி வந்தது. சைவ உரை வளக்குறைவுக்கு இது முக்கிய காரணமாக இருந்தது. கால வேறுபாட்டால் குறிப்பிட்ட சிலரைத் தவிர ஏனையோர்க்கும் சைவ நூல்களுக்கும் இடையே இடைவெளி ஏற்பட்டது. 20-ஆம் நூற்றாண்டில் உரை வகுக்கத் தொடங்கினர். திருவாசகம், திருமந்திரம், பெரியபுராணம் என்னும் நூல்களுக்குப் பல உரைகள் எழலாயின.

திருவாசகத்திற்கு → சீர்காழித் தாண்டவராயர், கா.சு.பிள்ளை, பண்டிதமணி மு.கதிரேசனார்
திருமந்திரத்திற்கு → திரிசிரபுரம் சிவானந்த சாகரயோகீசுவரர் நவநீத கிருஷ்ணபாரதி பேரா. சுப. அண்ணாமலை
பெரிய புராணத்திற்கு →சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணியனார்.
சிவஞான போதத்திற்குப் → சிவஞான முனிவர் (பேருரை, சிற்றுரை)
சிவஞான சித்தியாருக்குப் → சிவஞான முனிவர் (பொழிப்புரையும்)
சிவப்பிரகாசத்திற்கு → பலர் உரைகள்
நெஞ்சுவிடுதூதிற்கு → சிதம்பர சுவாமிகள்
உரை கண்டுள்ளனர்

### திருவாய்மொழி உரையாசிரியர்கள்: பட்டியல் - 94

| எ | உரையாசிரியர் | படிகள் | நூற் |
|---|---|---|---|
| 1. | ஆளவந்தார் | திருவாய் மொழியின் முதல் உரையாசிரியர் | 11 |
| 2. | திருக்குருகைப் பெருமான் பிள்ளை | 6000 படி | 13 |
| 3. | நம்பிள்ளை | 9000 படி | 14 |
| 4. | பெரிய வாச்சான் பிள்ளை | 2400 படி | 15 |
| 5. | அழகிய மணவாள சீயர் | 12,000 படி | 15 |
| 6. | வடக்குத் திருவீதிப் பிள்ளை | 36,000 படி | 15 |
| 7. | நஞ்சீயர் | 9,000 படி | 16 |

## (V) பாட்டியல் உரையாசிரியர்கள்

❖ பாட்டில் நூல்களுள் காலத்தால் முற்பட்டது பன்னிரு பாட்டியல். இதற்குக் **கா.ரா. கோவிந்தராச முதலியார்** விளக்கவுரை எழுதியுள்ளார். இலக்கண விளக்கப் பாட்டியலுக்கு நூலாசிரியரான **தியாகராய தேசிகரே** உரை இயற்றியுள்ளார். நவநீதப் பாட்டியலுக்கு **மு. சண்முகம் பிள்ளை** புதிய உரை இயற்றியுள்ளார். ஏனைய பாட்டியல்களுக்குப் பழைய உரைகள் உள்ளன. அவற்றை இயற்றியவர் பெயர் தெரியவில்லை.

## (VI) சாசனத் தமிழ் உரைநடை

பல்லவர் காலத்தில் எழுந்த சாசனங்களின் உரைநடை அமைதியை மூன்று வகையாக வகுக்கலாம்

1. முழுவதும் தனித்தமிழ்
2. ஒரு பாதி வடமொழி மறுபாதி தமிழ்
3. தமிழின் இடையிடையே வடமொழி என்பன அவை.

## (VII) இடைச்செருகல் உரைகள்

பழைய நூல்களில் பிற்காலத்தவர் எழுதிச் சேர்ப்பது இடைச்செருகல்' எனப்படும்.
(1) பூவோடு சேர்ந்து நாரும் மணப்பது போல் தன் கருத்து புகழடைய விரும்புதல்
(2) தன் கொள்கைக்கு முரணானவற்றை நீக்குதல்
(3) சிதைவுற்ற மூலப் பகுதிக்குப் பதிலாகத் தாமே எழுதிச் சேர்த்தல் என்பவை இடைச் செருகலின் முக்கிய காரணங்கள்.

FUTURE VISION

## (VIII) உரையாசிரியர்களின் உரை மரபுகள்

❖ உரையாசிரியர்களின் உரைகளைத் தொகுத்து நோக்கும்பொழுது பல பொதுவான பண்புகள் உரையெழுதலின் மரபாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளமை புலனாகின்றன. அவை வருமாறு:

1. நடைச்சிறப்பு
2. பிற உரை மறுப்பு
3. நாடகப்பாங்கு
4. இயைபு சுட்டல்
5. சொற்பொருள் தருதல்
6. மேற்கோள் சுட்டல்
7. வடமொழிப்பயிற்சி
8. தருக்க முறை
9. பாடவேறு சுட்டல்
10. உரையில் உவமை கூறல்
11. கொண்டுகூட்டி எழுதுதல்
12. பலதுறையறிவு
13. செய்யுளோசை சிறத்தல்
14. வினாவிடைப் போக்கு
15. இலக்கண விளக்கம்
16. பண்பாடு கூறல்
17. அடைமொழி அழகு
18. தமிழ் மரபிற்கு முதன்மை நல்கல்
19. பன்னூற் பயிற்சி
20. இலக்கணக் குறிப்பு கூறல்
21. பலகலைப் புலமை
22. திறனாய்வுப் பாங்கு
23. நூலாசிரியர் கருத்து வெளிப்படுத்தல்
24. பழமொழி, விடுகதை சுட்டல்

என்பன அவை.

## (31) உரைநடை தோற்றமும் வளர்ச்சியும் (கி.பி.18 முதல்)

இலக்கண, இலக்கிய, சமய வகை நூல்களுக்குப் பொருள் விளக்கம் கூறுவதற்காக எழுதப்பட்டவை உரையாசிரியர்தம் உரைநடை நூல்கள். இவற்றைப் பதிப்பிக்கின்றபொழுது தேவையான இடங்களில் குறிப்புரையும், பொழிப்புரை, விளக்கவுரை தருவதற்காக எழுதப்படுபவை.

### தமிழின் தொடக்க கால உரைநடையும் சிறுகதையும்

உரைநடையில் நூல் இயற்றும் வழக்கம் ஐரோப்பியரின் தொடர்பால் ஏற்பட்டது என்று மார்டாக் துரை குறிப்பிடுகின்றார். நீண்ட வாக்கியங்களாக எழுதப்பட்டுக் கொண்டிருந்த பழக்கத்தை ஐரோப்பியர்கள் மாற்றி அமைத்தனர். வார்த்தைகளுக்கு இடையே இடைவெளி விட்டு எழுதும் முறையைப் புகுத்தினர். வீரமாமுனிவரின் பரமார்த்தகுரு கதை இனிய எளிய உரைநடை வடிவைத் தமிழுக்குத் தந்தது. சீகன் பால்கு ஐயர் முயற்சியால் தமிழகத்தில் நாகைமாவட்டம் தரங்கம்பாடிக்கு முதலாவதாக அச்சு இயந்திரம் வந்தது. இதன் மூலம் புராண இதிகாசங்கள் உரைநடையில் எழலாயின. ஆங்கிலேயர்கள் தம் நலன் பொருட்டு ஏற்படுத்திக் கொண்ட சென்னைக் கல்விச் சங்கத்தின் வாயிலாகப் பல தமிழ் நூல்கள் அச்சிடப்பட்டன.

### உரைநடைத்தமிழ் அறிஞர்கள்

### 1. ஆறுமுக நாவலர் (1823 - 1879):

அழகிய திருத்தமான எளிய நடைக்கு வித்திட்டார். எனவே வசனநடை கைவந்த வல்லாளர் எனப் பரிதிமாற்கலைஞரால் பாராட்டப்பட்டார். இவரது நடை நாவலர் நடை என்றே சிறப்பிக்கப்பட்டது. மேலும் தமிழ் காவலர் எனவும், தற்காலத் தமிழ் உரைநடையின் தந்தை எனவும் போற்றப்பட்டார்.

### 2. இராமலிங்க அடிகளார் (5.10.1823 - 30.1.1874)

மனுமுறை கண்ட வாசகம் முதலான நூல்களிலும் வீராசாமி செட்டியார் தனது விநோதரச மஞ்சரி நூலாலும் நீண்ட தொடர்களைப் பயன்படுத்தினர்.

### 3. மாயூரம் நீதிபதி வேதநாயகம்பிள்ளை (1826-1889):

1. பிரதாப முதலியார் சரித்திரம்
2. சுகுண சுந்தரி
3. பெண் கல்வி
4. பெண் மானம்

ஆகிய நூல்கள் மூலம் ஆற்றொழுக்கான நகைச்சுவை மிக்க நடை உருவாக்கினார்.

### 4. சிங்காரவேலு முதலியார் (1853 - 1931)

அபிதான சிந்தாமணி என்னும் கலைக்களஞ்சியத்தை அரிய முயற்சியில் வெளியிட்டார். 10 ஆண்டு கடின உழைப்பில், உருவான இந்நூலைப் பாண்டித்துரைத்தேவர் நான்காம் தமிழ்ச் சங்கத்தின் மூலம் 1910-இல் வெளியிட்டார்.

FUTURE VISION

**5. வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் (1857 - 1946):**

இவரது,
1. அகலிகை வெண்பாவும் 2. கோம்பி விருத்தமும் குறிப்பிடத்தக்கன

**6. தி. செல்வகேசவராய முதலியார் (1864 - 1921):**

பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்.

1. பழமொழி நானூறு (உரை) 2. அறநெறிச்சாரம் (உரை)
இரண்டற்கும் உரை எழுதியுள்ளார்.

**7. எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை (1866 - 1947):**

1.கட்டுரை இலக்கியம் (உரைநடை நூல்) 2. தப்பிலி (உரைநடை நூல்)
என்பன இவரது உரைநடை நூல்கள்

**8. பாண்டித்துரைத் தேவர் (1867 - 1911):**

பலவநத்தம் நிலக்கிழார். 14.09.1901 -இல் நான்காம் தமிழ்ச் சங்கம் எனப் புகழப்படும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவினார். இவர் தொகுத்து வைத்த ஏட்டுச் சுவடிகள் தீக்கிரையாயின.

1. பன்னூல் திரட்டு 2. சைவசமய மஞ்சரி 3. துதிமஞ்சரி
முதலான தொகுப்பு நூல்களை வெளியிட்டார்.

**9. அரசஞ்சண்முகனார் (1868 - 1915):**

1. செந்தமிழ் 2. விவேகபானு
முதலான பத்திரிகைகளில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினார்.

**10. கா.ரா.கோவிந்தராச முதலியார் (1874 - 1952):**

1. இன்னா நாற்பது 2. கார் நாற்பது 3. பன்னிரு பாட்டியல்
முதலான நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். யாப்பருங்கலக் காரிகைக்கும் குறிப்புரை எழுதியுள்ளார்.

**11. மறைமலையடிகள் (1870 - 1950):**

தனித்தமிழ் இயக்கம் தோற்றுவித்தவர்.
1. முல்லைப்பாட்டு ஆராய்ச்சி 2. பட்டினப்பாலை ஆராய்ச்சி
3. குறிஞ்சிப்பாட்டு ஆராய்ச்சி 4. திருக்குறள் ஆராய்ச்சி
5. சிவஞானபோத ஆராய்ச்சி 6. மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்
7. தமிழர் மதம் 8. திருவாசக விரிவுரை
முதலான நூல்களை எழுதியுள்ளார். கோகிலாம்பாள் கடிதங்கள், நாகநாட்டரசி முதலான புதினங்கள் சிறப்பு மிக்கன. தாம் நடத்திய ஞான சாகரம் என்னும் இதழை அறிவுக்கடல் என மாற்றியமைத்துக் கொண்டார்.

**12. மு. இராகவையங்கார்(1878 - 1960):**

1. வேளிர் வரலாறு 2. சேரன் செங்குட்டுவன்
3. ஆழ்வார்கள் காலநிலை 4. சாசனத் தமிழ்க் கவி சரிதம்
முதலான நூல்கள் இவரது ஆய்வுப் பார்வைக்குச் சான்று பகரும்

**13. நாவலர் சோமசந்தர பாரதியார் (1878 - 1959):**

1. சேரர் தாயமுறை 2. தசரதன் குறையும் கைகேயி நிறையும்
என்னும் நூல்கள் சிறப்பு பெற்றன. தொல் பொருளதிகாரத்தின் மூன்று இயல்களுக்குப் புதிய உரை எழுதியுள்ளார்.

**14. பரிதிமாற்கலைஞர் (1979 - 1903):**

தமிழ்ப்பற்றின் காரணமாக 'வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரியார்' என்னும் பெயரைத் தமிழாக்கம் செய்து கொண்டார். தமிழ்மொழி வரலாற்றை ஆராய்ந்து முதன் முறையாக நூல் வடிவில் கொணர்ந்தவர் இவரே.

FUTURE VISION

**15. இரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார்( 1882 - 1954):**

வட்டத்தொட்டி என்னும் பெயரில் இலக்கிய அமைப்பு ஒன்றனை நடத்தி வந்தார்.

1. கம்பர் யார் 2. கம்பர் தரும் காட்சிகள்
3. இதய ஒலி 4. அற்புத ரசம்
5. முத்தொள்ளாயிர விளக்கம்

ஆகிய உரைநடை நூல்கள் இவரது உரைநடைத் திறனைப் பறைசாற்றும்.

**16. திரு.வி.கலியாண சுந்தரனார்(1883 - 1953):**

1. பெரியபுராணக் குறிப்புரை
2. திருக்குறள் முதல் 10 அதிகாரங்களுக்கு விளக்கவுரை
3. மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்
4. பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை நலம்
5. முருகன் அல்லது அழகு
6. சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து

முதலான நூல்களின் மூலம் இவரது உரைநடையின் மேன்மை விளங்கும். தமிழ்த்தென்றல், தமிழ்ச்சோலை எனப் போற்றப்படுபவர்.

**17. ந.மு. வேங்கடசாமி நாட்டார் (1884 - 1964):**

1. சிலப்பதிகாரம் 2. மணிமேகலை 3. அகநானூறு 4. திருவிளையாடற்புராணம்

ஆகிய நூல்களுக்கு விரிவான உரை வரைந்துள்ளார்.

1. நக்கீரர் (ஆய்வு நூல்) 2. அகத்தியர் (ஆய்வு நூல்) 3. கபிலர் (ஆய்வு நூல்) 4. கள்ளர் சரித்திரம் (உரைநடை) முதலான நூல்களை எழுதியுள்ளார்.

**18. கா.சுப்பிரமணிய பிள்ளை (1888 - 1945):**

முதன் முதலாகத் தமிழ் இலக்கிய வரலாற்றைத் தமிழில் எழுதியவர். சைவ சித்தாந்த நூல்கள் பலவற்றையும் பற்றி எளிய தமிழில் உரைநடை நூல்கள் எழுதியுள்ளார். சைவ சமயக் குரவர் நால்வர் வரலாறு பற்றி எழுதியுள்ளார். இவரது மெய்கண்டாரும் சிவஞான போதமும் என்னும் நூல் சிறப்புடையது.

**19. தி.வை. சதாசிவபண்டாரத்தார் (1892 - 1960):**

கல்வெட்டு ஆராய்ச்சியாளர்.

1. முதற் குலோத்துங்கன் வரலாறு 2. பாண்டியர் வரலாறு
3. இலக்கிய ஆராய்ச்சியும் கல்வெட்டுக்களும் 4. சோழர் வரலாறு

முதலான நூல்களும் தமிழ் இலக்கிய வரலாறும் எழுதியுள்ளார்.

**20. இரா.பி. சேதுப்பிள்ளை (1896 - 1961):**

சொல்லின் செல்வர் என அழைக்கப்படுபவர்.

1. ஊரும் பேரும் 2. செந்தமிழும் கொடுந்தமிழும்
3. தமிழின்பம் 4. திருவள்ளுவர் நூல்நயம்
5. சிலப்பதிகார நூல்நயம் 6. தமிழ் விருந்து
7. சிலப்பதிகார நூல்நயம் 8. தமிழ்நாட்டு நவமணிகள்

முதலான நூல்களைப் படைத்துள்ளார். தமிழின்பம், சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற முதல்நூல் என்னும் சிறப்பிற்கு உரியது.

**21. மயிலை சீனி, வேங்கடசாமி (1900 - 1979)**

1. பௌத்தமும் தமிழும் 2. சமணமும் தமிழும்
3. கிறித்துவமும் தமிழும் 4. மறைந்து போன தமிழ் நூல்கள்
5. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்
6. எழுவகைத் தாண்டவம் (சமய ஆராய்ச்சி நோக்கில்)

ஆகிய இவரது நூல்கள் புகழ் வாய்ந்தன.

**22. தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் (1901 - 1981):**

1. கானல்வரி 2. குலசேகரர்
3. குடிமக்கள் காப்பியம் 4. பிறந்தது எப்படியோ

முதலான இவரது நூல்கள் சிறப்புடையன. பன்மொழிப் புலவர் இவர்.

**23. ஞா. தேவநேயப் பாவணர் (1902 - 1981):**

மொழிஞாயிறு எனப் போற்றப்படுபவர், தனித்தமிடை வாழ்க்கையதுவாகக் கொண்டவர். தமிழே உலக மொழிகளுக்கெல்லாம் தாய் என மொழியியல் அடிப்படையில் நிரூபித்தவர்.

1. முதல் தமிழ்மொழி
2. ஒப்பியல் மொழிநூல்
3. பழந்தமிழாட்சி
4. தமிழர் திருமணம்
5. தமிழ் வரலாறு
6. மொழி வரலாறு
7. தமிழர் வரலாறு
8. தமிழிலக்கிய வரலாறு

முதலாய நூல்களில் இவரது தமிழ்நடையும் ஆய்வு மனப்பான்மையும் புலனாம்.

**24. மா. இராசமாணிக்கனார் (1907 - 1967):**

1. மொகஞ்சதரோ
2. பல்லவர் வரலாறு
3. சோழர் வரலாறு
4. தமிழகத்தின் வடவெல்லை
5. தமிழர் திருமணத்தில் தாலி
6. கம்பர் யார்?
7. திருவள்ளுவர் காலம்
8. ஆற்றங்கரை நாகரிகம்

முதலான பல நூல்கள் இவரது பங்களிப்புகளாகும்.

**25. மு.வரதராசனா (1912 - 1974):**

90 நூல்களுக்கு மேல் எழுதியுள்ளார்.

1. மொழிநூல்
2. மொழிவரலாறு
3. இலக்கிய மரபு
4. இலக்கியத் திறன்
5. தமிழ் இலக்கிய வரலாறு
6. தம்பிக்கு
7. தங்கைக்கு
8. கள்ளோ காவியமோ
9. அல்லி
10. அகல்விளக்கு

முதலான பல நூல்களின் ஆசிரியர். இவரது தமிழ் இலக்கிய வரலாறு சாகித்திய அகாதெமி பரிசு பெற்றது.

**26. வ.சுப. மாணிக்கம் (1917 - 1989):**

1. வள்ளுவம்
2. தமிழ்க்காதல்
3. தொல்காப்பியப் புதுமை
4. கொடை விளக்கு
5. எந்தச் சிலம்பு
6. சிந்தனைக் களங்கள்
7. இலக்கிய விளக்கம்
8. ஒப்பியல் நோக்கு
9. கம்பர்

முதலான இவரது படைப்புகள் புகழ்பெற்றவை.

**27. அறிஞர் அண்ணா (20 - நூற்):**

உரைநடை மறுமலர்ச்சிக்கு உரமூட்டியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். இவரது நடை எதுகை, மோனைச் சிறப்பு மிக்கது, இவரது மேடைத் தமிழ் தனிச் சிறப்புமிக்கது.

1. நிலையும் நினைப்பும்
2. நாடும் ஏடும்
3. தமிழரின் மறுமலர்ச்சி
4. ஏ தாழ்ந்த தமிழகமே

என்னும் நூல்கள் தமிழர்களுக்கு 'உணர்வு' ஊட்டுவன.

**28. மு.கருணாநிதி (20 - நூற்):**

'கலைஞர்' என்னும் சிறப்புப் பெயருக்கு உரியவர். முத்தமிழ் வித்தகர். தமிழ் இலக்கியங்களில் நாட்டம் மிக்கவர். அரசியல் பணியோடு இலக்கியப் பணியும் புரிபவர்.

1. குறளோவியம்
2. நெஞ்சுக்கு நீதி
3. சங்கத்தமிழ்
4. தென்பாண்டிச் சிங்கம்
5. பூம்புகார்
6. மந்திரிகுமாரி

ஆகிய நூல்கள் இவரது உரைநடையான தனித் தன்மைக்குச் சான்றுகளாகின்றன. மேலும், கல்கி. ரா. கிருஷ்ணமூர்த்தி, வானமாமலை, குன்றக்குடி அடிகளார் அ.ச. ஞான சம்பந்தன், க.ப அறவாணன், பொற்கோ முதலான அறிஞர்களும் உரைநடைத்தமிழ் வல்லோராகத் திகழ்ந்து வருகின்றனர்.

FUTURE VISION

## (இ) உரைநடை வளர்ச்சி

உலக மொழிகளில் முதன் முதல் தோன்றியது கவிதையே என ஆட்டோ ஜெஸ்பர்சனும், எமர்சனும் ஒருமித்து மொழிவர். இவர்கள் குறிப்பிடும் பாட்டு பொருள் தெளிவில்லாத உணர்ச்சிக் குமுறலைக் குறிப்பிடும். உண்மையில் மொழியின் அடிப்படையாக - பொருண்மையைத் தெளிவாகச் சுட்டும் தகுதி உடையதாக - விளங்குவது உரைநடையே. இத்தகைய உரைநடை தோன்றிய பின்பே வளமான செறிவுள்ள கவிதைகள் தோன்றியிருக்க முடியும். உரைநடையைப் பற்றி விளக்கும் பிரிட்டன் கலைக்களஞ்சியம் "உரைநடை என்பது, இலக்கிய மரபு கெடாத நல்லநடையில், ஆழ்ந்த கருத்தோடு, பாட்டுக்குள்ள சந்தச் சேர்க்கை இன்றியே நல்ல ஓசைநயம் உடையதாகி, ஒளிவு மறைவின்றி உள்ளதை உள்ளபடி உரையிட்டுக் காட்டும் வகையிலே நேரியமுறையில் கருத்துக்கும் காரணத்துக்கும் பொருத்தமானதாக - ஒன்றனைப் பற்றியோ ஒருவரைப் பற்றியோ - விளக்கி உரைப்பதாகும்" என்று கூறும்.

பாட்டை நோக்கிச் செல்லும் உரையை உரைவீச்சு என்றும், உரைச் செய்யுள் என்றும் விளம்புவர். பேச்சை நோக்கிச் செல்லும் உரையையே உரைநடை என்ற சொல் குறிப்பிடும். உரைநடை பேச்சின் சாயலைப் பெற்றிருப்பதால். எளிமையானது. நேரே பொருளை உணரச் செய்யும் ஆற்றலுடையது. எனவே இன்றைய உலகத்தாரிடையே உரைநடை செல்வாக்குப் பெற்று வருகிறது. இன்று வெளிவரும் நூல்களுள் பெரும்பாலான உரைநடை நூல்களே.

பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியம் 3500 ஆண்டுகளுக்கு முன்னரே உரைநடை தமிழில் வழங்கியமையை உறுதிப்படுத்தும். உரைநடையின் வகைகள் நான்கினைத் தொல்காப்பியர்,

**பாட்டிடை வைத்த குறிப்பினானும்**
**பாவின் றெழுந்த கிளவியானும்**
**பொருள் மரபு இல்லாப் பொய்ம்மொழியானும்**
**பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும் என்று**
**உரைவகை நடையே நான்கென மொழிப**

எனத் தெளிவுபடுத்துவார். உரையும் பாட்டும் விரவி வரும் இலக்கிய வகைமையினையும் அவர் குறிப்பிட்டு உள்ளார்.

**தொன்மை தானே**
**உரையொடு புணர்ந்த பழமை மேற்றே**

பேச்சு வழக்கோடு தொடர்புடைய உரைநடையினைக் 'கட்டுரை வன்மை' என்று தொல்காப்பியர் சுட்டுவார். அவர் காலத்து உரை நடை இத்தகையது எனக் கூறப் பதிவுச் சான்று எதுவும் இல்லை.

சங்க இலக்கியங்களில் உரைச் செய்யுளோ, தனி உரைநடையோ காணப்படவில்லை. **தகடூர் யாத்திரை** என்ற நூல் உரைவிரவிய பாடலைக் கொண்ட சங்கக் கால நூல் என்பர். அதன் ஒருசில பாக்கள் மேற்கோள்களாகக் காணப்படுகின்றனவன்றி உரைப்பகுதி எதுவும் கிடைக்கவில்லை. **சங்கப் பாக்களின் கீழ்க் காணப்படும் குறிப்புரைகளும், துறைகளும் பழந்தமிழ் உரைநடையைக் காட்டுகின்றன.** எனினும் அவை மிகச் சிறிய அளவிலேயே உள்ளன மற்றும் அவை சங்க மருவிய காலத்தில் எழுதப்பட்டவையாகலின் சங்க காலத்தது எனக் கொள்ளற்கில்லை. **சங்க காலத்தைச் சார்ந்த கல்வெட்டுக்களால்** ஓரளவு அக்காலத்திய உரைநடைப் பண்புகளைக் காண இயலும். ஆனால் பேச்சுத் தமிழில் உள்ள அக்கல்வெட்டுக்கள் வழுவும் பிழை பாடும் மிக்கனவாக உள்ளன. பாமரத்தனமான அவற்றை உயரிய உரைநடைப்பகுதியாக ஏற்றற்கில்லை. பேச்சு மொழியை ஆயவேண்டுமானால் மட்டுமே கல்வெட்டுமொழி உதவமுடியும்.

சங்கம் மருவியகால இலக்கியமான **சிலப்பதிகாரம் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக உள்ளது. அங்குக் காணப்படும் உரைகள், உரைப்பாட்டு மடை, உரைபெறு கட்டுரை, கட்டுரை எனப் பல குறியீடுகளோடு விளங்குகின்றன.** பல உரைப்பகுதிகள் பாட்டுப் போலவே உள்ளன. தொடக்கத்தில் அமைந்த உரைபெறு கட்டுரையில் உரைநடைத்தன்மை ஓரளவு விஞ்சியுள்ளது. உரைப்பாட்டு, கட்டுரை ஆகிய இரண்டும் வெவ்வேறானதாகக் கருதப்பட்டிருக்க வேண்டும். அவற்றுள் ஒன்று உரைச்செய்யுள் அல்லது உரைவீச்சாகவும் ஏனையது உரைநடையாகவும் கொள்ளத் தக்கன. எனினும் தனித்த - செய்யுள் கலவாத உரைநடை, **சிலம்பில் குறைவே.**

**உரை நூல் வரிசையில் முதலில் தோன்றியதாகக் கருதப்பெறும் இறையனார் களவியலுரை** மிக விளக்கமாக அமைந்துள்ளது. இவ்வுரை கடைச்சங்க கால இறுதியில் உரைக்கப்பட்டு 14 தலைமுறைகள் கழித்துக், கி.பி. எட்டாம் நூற்றாண்டில் ஏட்டில் எழுதப்பட்டது என்பர். இவ்வுரையில் சிறிதும் பெரிதுமான தொடர்கள் அமைந்துள்ளன. சொற்பொருள் விளக்கம், வருணனை போன்ற சிறப்புக் கூறுகளை இந்நூல் கொண்டுள்ளது. இதன் போக்கு, தனித்த உரைநடையாக இல்லாமல் உரைச்செய்யுளாக - உரை வீச்சாகக் காணப்படுகிறது.

**யாங்ஙனம் நிற்குமோ வெனின், சந்தனமும் சண்பகமும் தேமாவும்**
**தீம்பலவும் ஆசினியும் அசோகும் கோங்கும் வேங்கையும் குரவமும்**
**விரிந்து, நாகமும் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும்**
**மௌவலொடு மணங்கமழ்ந்து... -இறையனார் களவியலுரை**

FUTURE VISION

கி.பி. பத்தாம் நூற்றாண்டிலிருந்து உரை நூல்கள் தமிழில் பல்கிப் பெருகின. **தொல்காப்பிய உரையாசிரியர்களாவார்** இளம்பூரணர். தெய்வச்சிலையார், கல்லாடனார், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகியோர். நச்சினாக்கினியர் பத்துப்பாட்டிற்கும், சீவக சிந்தாமணிக்கும் கூட உரை இயற்றியுள்ளார். சிலப்பதிகாரத்தின் சீரிய உரையாக அடியார்க்கு நல்லாருரையும், திருக்குறளின் உற்ற உரையாகப் பரிமேலழகர் உரையும் விளங்குகின்றன. வினாவும் விடையுமாகத் **தர்க்கரீதியில் எழுதப்பட்ட உரைகள் பெரும்பாலும் நீண்ட தொடர்களைப் பெற்றுள்ளன. கற்றவர்க்கு மட்டுமே புரியக் கூடியவை இவை.**

“புறக்காழன எனவே, அவ்விழி வெளிறென்பது அறியப்படும். அவை பனையும் தெங்கும் கமுகும் முதலாயின புல்லேனப்படும்: இருப்பையும் புளியும் ஆச்சாவும் மரமெனப்படும்” - பேராசிரியர் உரை.

உரையாசிரியர்களின் நடை சற்றுக்கடுமையானதாக இருப்பினும், உரைநடையை நன்கு வளர்த்து விட்டவர்கள் அவர்கள். செறிவும் காரண காரியப் பொருத்தமும் விளக்கமும் சான்றவையாக அவ்வுரைகள் உள்ளன.

பல்லவா் காலத்து உரைநடையை அறிய உதவுவன பக்தி இலக்கியங்களும் கல்வெட்டுக்களும். இக்காலத்தில் சரிக்குச்சரி வடமொழிச் சொற்களும் தமிழ்ச் சொற்களும் கலந்த மணிப்பிரவாள நடை தோன்றியது. ஸ்ரீ புராணம் எழுதிய மண்டல புருடர்தாம் இத்தகையதொரு நடையைத் தோற்றுவித்தவர். சமண சமய நூலான கத்திய சிந்தாமணியும் மணிப்பிரவாள நடையிலானதே. சமணர்களால் தோற்றுவிக்கப்பட்ட இந்நடை, சோழர் காலத்தில், வைணவ உரையாசிரியர்களால் பெரிதும் வளர்க்கப்பட்டது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் உரையாசிரியர்களான பெரிய வாச்சான் பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை, அண்ணங்கராச்சாரியார் போன்றோர் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்கள்.

மணிப்பிரவாளநடை விலகத் தொடங்கிய நேரத்தில் மேலை நாட்டினரின் ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்டது. கிறித்துவ சமயக் குருமார்கள் பலர் தமிழ் நாட்டு மக்களோடு கலந்து வாழ்ந்தனர். தமிழர்களிடையே தம் மதத்தைப் பரப்ப வேண்டுமெனில், தமிழ் மொழியில் செய்திகளைத் தர வேண்டுமென எண்ணனர். கவிதையில் சமயக் கருத்துக்களைச் சொல்வதைக் காட்டிலும் உரைநடையில் கூறலே தக்கது எனக் கண்டு செயல்பட்டனர். அச்சுப் பொறியினை அறிமுகப்படுத்தியதோடு, எண்ணிறந்த உரைநடை நூல்கள் தமிழில் தோன்றவும் வழி வகுத்தனர். நீண்டநெடிய தொடர்களை விடுத்துச் சிறிய, எளிய தொடர்களைக் கையாண்டனர். தமிழ் மொழியும் தன் இறுக்கமான போக்கை விட்டு, நெகிழ்ந்து கொடுத்தது. இதன் காரணமாக உரைநடை நூல்கள் பல பெருகின. உண்மையிலேயே உரைநடை பெருகுவதற்கு அச்சுப் பொறியே காரணம். வீரமாமுனிவர் தமிழ் வரிவடிவத்தை எளிமையாக்கி ஒழுங்குபடுத்தியமையும். இடத்திற்கேற்ற நிறுத்தற்குறிகளை இடம்பெறச் செய்தமையும் உரைநடை விரைந்து வளரக் காரணமாயின. இதனால் வீரமாமுனிவரைத் தமிழ் உரைநடையின் தந்தை என்பர்.

**இராபர்ட்டி நொபிலி, ஜி.யு.போப், வீரமாமுனிவர் முதலிய மேலை நாட்டினரும், இராமலிங்க அடிகளார், சிவஞானிமுனிவர் போன்ற தமிழ்நாட்டு அறிஞர்களும் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் உரைநடையை நன்கு வளர்த்தனர்.**

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலச் சொற்கள் பெரிய அளவில் தமிழில் ஊடுருவத் தலைப்பட்டன. ஏற்கனவே வடமொழித் தாக்கத்தால் வாட்டமுற்றிருந்த தமிழ், ஆங்கிலக் கலப்பையும் தாங்க முடியாமல் தத்தளித்தது. தமிழ் எனும் ஒளி இருண்டு போகாமல் காக்கும் பொருட்டுத் தமிழின்பால் இயல்பாக ஈடுபாடு கொண்டிருக்கும் இயற்கை. மறைமலையடிகளைத் தோற்றுவித்தது. எஞ்சியிருந்த மணிப்பிரவாளத்தின் மாயை அகலவும், ஆங்கிலக் கலப்பாம் பேய் ஓடவும் செய்த தனித்தமிழ் இயக்கம் கண்ட தகையாளர். **மறைமலையடிகள்.** எம்மொழிக் கலப்பும் எம்மொழிக்குத் தேவையில்லை என்ற இருமாறுப்புக்குரியராயினர். தமிழர் அவரைத் தொடர்ந்து **தேவநேயப் பாவாணர், பெருஞ்சித்தரனார், தமிழ்க் குடிமகன், இரா.இளவரசு போன்ற தனித்தமிழ் இயக்கத்தைக் கட்டிக் காக்கும் தகையாளர் பெருகினர்.** இன்று ஒருசொல் கூடக் கலப்பின்றி எழுதவும் பேசவும் வல்ல பலர் நம்மிடையே வாழ்கின்றனர். எனினும் இன்றும் கூடச் சிலர் கையாளும் தமிழில் வடமொழி ஒலிகளாக ஜ.ஸ.ஷ.க்ஷ,ஹ என்பன வடுக்களாகக் காணப்படுகின்றன.

மேலை நாட்டார்களான தத்துவபோதகர், வீரமாமுனிவர், சீகன்பால்கு, எல்லீசர், கால்டுவெல், இரேனியல், வின்சுலோ, போப் போன்றோர் ஆங்காங்கே அச்சுக்கூடம் ஏற்படுத்தியும் அருந்தமிழ் உரைநடையில் கிறித்துவக் கருத்துக்களைப் பரப்பியும், அகராதி, மொழி ஆராய்ச்சி, மொழிபெயர்ப்பு போன்ற நூல்களை ஆக்கியும் தமிழ் வளர உதவினர். இவர்களோடு சேர்ந்து - அல்லது இவர்கட்குப் போட்டியாக - இந்து மதத்தைச் சேர்ந்தவர்களும் பல உரைநடை நூல்களைப் படைத்தனர். சிவஞானமுனிவர், இராமலிங்க அடிகளார், மறைமலை அடிகளார், விபுலானந்த அடிகளார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்.

சமயத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் உரைநடை இலக்கியங்களான **சிறுகதை, புதினம்** போன்றவை மேலைத்தாக்கத்தால் உருவாகி வளர்ந்தன. அதன் காரணமாக உரைநடை இலக்கியங்கள், கவிதை இலக்கியங்களை விடவும் மிகுதியான செல்வாக்குப் பெறத் தலைப்பட்டன.

**அம்பலக்காட்டில் 1577இல் வெளியான கிறிஸ்துவோபதேசம் என்ற நூலே தமிழில் அச்சான முதல் நூல் என்பர்.** இதுவே இந்தியாவில் அச்சிடப்பட்ட முதல் அச்சுநூலும் கூட பேச்சுத்தமிழும் பழமொழிகளும் கலந்து எழுதப்பட்ட **தத்துவ போதக சாமியின் உரைநடையே இக்கால நடையின் சாயலில் எழுதப்பட்டது.** இவர்தம் நூல்கள் ஞான உபதேசகாண்டம், ஞான தீபிகை, உபதேசசல்லாபம் முதலியவை. வீரமாமுனிவர் வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், பேதகமறுத்தல், ஞானம் உணர்த்தல், திருச்சபைக்கணிதம், பரமார்த்த குருகதை, வாமன் கதை ஆகிய உரைநடை நூல்களை இயற்றினார். இவை தத்துவ போதக சாமியின் நடையை விடப்பண்பட்ட நடையில் அமைந்தன. 1716இல் சீகன் பால்கு தமிழ் - இலத்தீன் ஒப்பிலக்கண ஆய்வு என்ற நூலைப் பதிப்பித்தார்.



FUTURE VISION

ஜி.யூ. போப் எழுதிய இங்கிலாந்து தேச சரித்திரம், கால்டு வெல் இயற்றிய தாமரைத் தடாகம், ஞானஸ்நானம், எல்லிஸ்துரை எழுதிய வீரமாமுனிவர் வரலாறு போன்றவையும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிறந்த உரைநடை நூல்களாக வெளிவந்தவை.

தமிழைத்தாய் மொழியாகக் கொண்டவர்களான **சிவஞான முனிவர், ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம் பிள்ளை, உ.வே. சாமிநாதையர், மறைமலை அடிகள், திரு.வி.க., கோபால கிருணஷ்மாச்சாரியார், பண்டித மணி கதிரேசஞ்செட்டியார், கா.சு. பிள்ளை, எஸ். வையாபுரிப்பிள்ளை, ரா.பி. சேதுப்பிள்ளை, மு.வரதராசனார், தேவநேயப் பாவாணர், தெ.பொ.மீ போன்ற பலரும் தமிழ் உரைநடை வளர்ச்சிக்காகப் பாடுபட்டுள்ளனர்.**

★ **ஆறுமுக நாவலர்**

**ஊர் யாழ்ப்பாணத்து நல்லூர்.** சைவவேளாள மரபினர். யாழ்ப்பாணம், சிதம்பரம் ஆகிய இடங்களில் தமிழ்க்கல்லூரிகள் நிறுவித் தமிழ் வளர்த்தார். **சைவ வினா - விடை, சைவசமய நெறி உரை, திருமுருகாற்றுப்படை உரை, திருவிளையாடற்புராண வசனம், பெரிய புராண வசனம், பாரதம், கந்தபுராண வசனங்கள், சிவஞான போதச் சுருக்கம் போன்ற உரைநடை நூல்களை இயற்றினார்.** திருவாவடுதுறை ஆதினம் இவருக்கு **'நாவலர்'** எனப்பட்டம் வழங்கியது. இவரது நடை, இலக்கணப் பிழையற்ற தூய நடை. **"வசன நடை கைவந்த வல்லாளர்"** எனப் பரிதிமாற்கலைஞர் இவரைப் பாராட்டுவார். இவர் தமிழ்க் காவலர் என்றும் தற்காலத் தமிழ் உரைநடையின் தந்தை என்றும் போற்றப்படுவார். 'வைதாலும் வழுவின்றி வைவார்' எனச் சி.வை.தாமோதரம் பிள்ளை இவரைப் பாராட்டுவார்.

★ **இராமலிங்க அடிகளார்**

இவர் அருட்பா எழுதியதோடு சிறந்த உரைநடை நூல்களான **மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருணிய ஒழுக்கம், உண்மை நெறி** போன்ற உரைநடை நூல்களையும் தோற்றுவித்தார். இவரது உரைநடை நீண்ட தொடர்களைக் கொண்டது.

★ **சி.வை.தாமோதரம் பிள்ளை**

**ஊர் யாழ்ப்பாணம் சிறுபட்டி, 1832இல் பிறப்பு. தந்தை வைரநாதப்பிள்ளை.** இவர் பதிப்பித்த நூல்களாவன: தொல்காப்பியம், நச்சினார்க்கினியர் சேனாவரையர் **உரைகள்**, இறையனார் களவியல் உரை, வீரசோழியம், இலக்கண விளக்க உரை எனும் உரை நூல்கள், கலித்தொகை, சூளாமணி, தணிகைப்புராணம் போன்ற இலக்கியங்களின் உரைகள்.

★ **உ.வே.சாமிநாதையர்(1855 - 1942)**

**ஊர் உத்தமதானபுரம்:** தந்தை வேங்கட சுப்பையர் **'தமிழ்த் தாத்தா'** என அழைக்கப்படும் இவர் பெரும்பாலான பழந்தமிழ் நூல்களை அச்சிலேற்றியுள்ளார். **மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம், புதியதும் பழையதும், கண்டதும் கேட்டதும், நினைவு மஞ்சரி போன்ற உரைநடை நூல்களை எழுதியுள்ளார்.** மாநிலக்கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றிய இவர் **'என் சரித்திரம்'** என்னும் தமது வாழ்க்கை வரலாறு கூறும் நூலையும் வெளியிட்டுள்ளார்.

இவர்க்கு ஆங்கில அரசினர் **"மகா மகோபாத்தியாய"** என்னும் பட்டம் வழங்கினார். இவரைப் பாரதியார்,

**குடந்தை நகர்க் கலைஞர் கோவே**
**பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்**
**காலமெல்லாம் புலவர்வாயில் துதியறிவாய்**

எனப் பாராட்டினார்.

★ **வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார்**

**ஊர் திருவல்லிக்கேணி: "உரையாசிரியச் சக்கரவர்த்தி"** எனப் பாராட்டப் பெறுபவர். தமிழ்ப் பேரகராதிக் குழுவில் 20 ஆண்டுகள் பணியாற்றினார். **பத்துப்பாட்டு, திருக்குறள், தண்டியலங்காரம், வில்லிபுத்தூரார் பாரதம், கம்பராமாயணம் போன்ற நூல்கட்கு உரை எழுதியுள்ளார்.**

★ **பண்டிதமணி கதிரேஞ்செட்டியார் (1881 - 1953)**

அண்ணாமலைப் பல்கலைகத் தமிழ்ப்பேராசிரியர்: **மிருச்ச கடிதம் என்ற வடமொழி நூலை "மண்ணியல்" சிறுதேர் என்ற பெயரில் தமிழில் பெயர்த்து வெளியிட்டார். சுக்ரநீதி, உதயண சரித்திரம், சுலோசனை, கௌடலியம் என்பனவும் இவர்தம் மொழி பெயர்ப்ப நூல்கள். திருவாசகத்தின் நீத்தல் விண்ணப்பம், திருச்சதகம் ஆகிய நூல்கட்கு உரை வரைந்தார்.** இவரது சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் **"உரைநடைக்கோவை"** என்ற தலைப்பில் இருதொகுதிகளாக வெளிவந்துள்ளன. பண்டிதமணி, மகா மகோபாத்தியாய எனும் பட்டங்களைப் பெற்றுள்ளார். இவரது உரைநடை **கடுமையான பண்டித நடை** என்பர்.


FUTURE VISION

★ **கா. சுப்பிரமணிய பிள்ளை (1884 - 1945)**

தமிழ் நாட்டில் முதல் பட்டம் பெற்றவர். சட்ட நிபுணர். அண்ணாமலைப் பல்கலைத் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார். **சைவக்குரவர் வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு, தொல்காப்பியப் பொருளதிகாரம் அல்லது பழந்தமிழர் நாகரிகம்** ஆகிய இவர்தம் உரைநடை நூல்கள் சிறப்புக்குரியவை.

★ **ந.மு. வேங்கடசாமி நாட்டார் (1884 - 1944)**

**அகத்தியர், கபிலர், நக்கீரர் பற்றி அரிய நூல்களை வெளியிட்டுள்ளார்.** திருவிளையாடற் புராணம், சிலம்பு, மேகலை, அகநானூறு ஆகியவற்றிற்குச் **சீரிய உரைகள்** வரைந்துள்ளார்.

★ **எஸ்.வையாபுரிப்பிள்ளை (1888 - 1956)**

இவர் தலைமையில் சென்னைப் பல்கலைக் கழகம் **தமிழ்ப் பேரகராதி** (Tamil Lexicon) வெளியிட்டது. **தமிழ்ச்சுடர் மணிகள், தமிழர் பண்பாடு, இலக்கியச் சிந்தனைகள், காவியகாலம்,** இலக்கிய உதயம் போன்ற தமிழ் உரைநடை நூல்களை எழுதியுள்ளார்.

★ **மறைமலை அடிகள்(1883 - 1950)**

**ஊர் நாகையை அடுத்த காடம்பாடி.** தமிழ், வடமொழி ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வல்லவர். **சுவாமி வேதாசலம் என்ற தம் பெயரை மறைலை அடிகள் எனத்தமிழில் மொழிபெயர்த்துக் கொண்டார். தாம் நடத்திய ஞானசாகரம் என்ற இதழின் தலைப்பை அறிவுக் கடல் என மாற்றினார்.** வடமொழியும், ஆங்கிலமும் தமிழில் கலப்பினை ஏற்படுத்தியமையைப் பொறாது. அக்கலப்பினை எதிர்ப்பதற்கென்றே **தனித்தமிழ் இயக்கம் கண்ட தகையாளர்** மறைமலை அடிகளார். இவர் சங்க இலக்கியங்களை மக்களிடையே பரப்பியதோடு, மேனாட்டுத் திறனாய்வு முறைகளையும் தமிழில் புகுத்தினார். ''மறைமலை ஒரு பெரும் அறிவுச் சுடர்: தமிழ் நிலவு'' எனத் திரு.வி.க. இவரைப் பாராட்டியுள்ளார்.

இவர் இயற்றிய நூல்கள் **முல்லைப் பாட்டு ஆராய்ச்சி, பட்டினப்பாலை ஆராய்ச்சி, குறிஞ்சிப்பாட்டு ஆராய்ச்சி, திருக்குறள் ஆராய்ச்சி சிவஞான போத ஆராய்ச்சி, மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், தமிழர்மதம், திருவாசக விரிவுரை, சாகுந்தலம் (மொழிபெயர்ப்பு நூல்), சிறுவர்க்கான செந்தமிழ் என்னும் தலைப்பில் பாடநூல்கள்.**

**நாகநாட்டரசி. கோகிலாம்பாள் கடிதங்கள் என்னும் புதினங்களையும், திருவொற்றியூர் முருகர் மும்மணிக்கோவை, சோம சுந்தரக் காஞ்சியாக்கம் போன்ற கவிதை இலக்கியங்களையும்** ஆக்கியுள்ளார். கட்டுரை எழுதும் முறையை இவரது அறிவுக்கொத்து எனும் நூலில் விளக்குகிறார். இவர் எழுதிய ஆங்கில நூல் The Ancient and modern Poets. இவர் நடத்திய ஆங்கில இதழ் The Ocean of wisdom.

★ **திரு.வி.கல்யாண சுந்தரனா˙ (1883 - 1953)**

**ஊர் திருவாரூர், பெற்றோர் விருத்தாசல முதலியார், சின்னம்மை,** ஆசிரியர் யாழ்ப்பாணம் கதிரை வேற்பிள்ளை: **வெஸ்லி கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.**

இவர் நடத்திய **இதழ்கள் தேசபக்தன், நவசக்தி** இயற்றிய நூல்கள் **மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை, சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து, முருகன் அல்லது அழகு, சைவத்திறவு, தமிழ்த்தென்றல் (சொற் பொழிவுகள்), தமிழ்ச் சோலை (பத்திரிகைத் தலையங்கங்கள்) மேடைத் தமிழ் (மேடைப் பேச்சுக்கள்), அருள்வேட்டல் (செய்யுள் நூல்).**

இவரது உரைநடை சின்னஞ்சிறு தொடர்கள், வினா - விடை வியங்கோள், வியப்புத் தொடர்கள், அடுக்குத் தொடர்கள், புதுச் சொல்லாக்கம், உவமை, உருவகம் போன்றவற்றைக் கொண்டு தனித்தன்மையும் எளிமையும் சான்று விளங்கும். புதிய உரைநடையின் தந்தை என்றும் தமிழ் மேடைப் பேச்சின் தந்தை என்றும் இவர் போற்றப் பெறுகிறார்.

★ **வ.சு.ப. மாணிக்கம்**

**பிறந்த ஆண்டு 1917, ஊர் மேலைச்சிவபுரி.** மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகப் பணி ஆற்றியவர். நூல்கள் : **வள்ளுவம், தமிழ்க் காதல், தொல்காப்பியப் புதுமை, கொடை விளக்கு, எந்தச் சிலம்பு, சிந்தனைக்களங்கள், இலக்கிய விளக்கம், ஒப்பியல் நோக்கு, நெல்லிக்கனி (நாடகம்) முதலிய 15 நூல்கள்.**

★ தமிழண்ணல்

**இயற்பெயர் இராம: பெரியகருப்பன்.** மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றினார். நூல்கள்: **குழந்தைகள் இலக்கியம் (பாடல்), ஒப்பிலக்கிய அறிமுகம், சங்க இலக்கிய ஒப்பீடு, புதிய நோக்கில் தமிழ் இலக்கிய ஒப்பீடு, புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, அறிவியல் அறிமுகம் முதலியன.**

★ மயிலைசீனி வேங்கடசாமி (1900 - 1980)

ஊர் **மயிலாப்பூர்:** தொடக்கப்பள்ளி ஆசிரியர் பணி. நூல்கள்: **இறையனார் களவியல் ஆராய்ச்சி, அஞ்சிறைத் தும்பி, மறைந்து போன தமிழ் நூல்கள், புத்த ஜாதக் கதைகள், பௌத்தக் கதைகள், சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும், கிருத்தவமும் தமிழும், தமிழர் வளர்த்த அழகு கலைகள், சமயம் வளர்த்த தமிழ்** முதலியன.

★ நா.வானமாமலை

**ஊர் நாங்குனேரி, ஆராய்ச்சி காலாண்டு இதழ் நடத்தினார். தமிழர் நாட்டுப் பாடல்கள், கட்ட பொம்மன் கதைப்பாடல், தமிழர் வரலாறும் பண்பாடும். இயற்கைச் செல்வங்கள், விண்யுகம், ரப்பரின் கலியுகம்.**

★ ரா.பி. சேதுப்பிள்ளை (1896 - 1961)

**சென்னை பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியர். சொல்லின் செல்வர்** என அழைக்கப்பட்டார். **25 நூல்கள் எழுதிய இவர், தமிழின்பம் என்ற நூலுக்காகச் சாகித்திய அகாடமி விருது பெற்றார்.**

நூல்கள்: **செந்தமிழும் கொடுந்தமிழும், திருவள்ளுவர் நூல் நயம், சிலப்பதிகார நூல்நயம், வீரமாநகர், தமிழ்விருந்து, கால்டுவேலர், தமிழ்நாட்டு நவமணிகள் முதலியவை. D.Litt பட்டம் பெற்றார்.**

★ ஔவை துரைசாமிப் பிள்ளை (1902 - 1981)

**ஊர் திண்டிவனம்:** இவர் நூலாசிரியராகவும், உரையாசிரியராகவம் விளங்கினார். கல்லூரிப் பேராசிரியர். நூல்கள் : மருள் நீக்கியார் (நாடகம்), சிலப்பதிகார மணிமேகலை, சேர மன்னர் வரலாறு, வரலாற்றுக் காட்சிகள், நந்தா விளக்கு, மத்த விலாசம் (மொழிப்பெயர்ப்பு) முதலியன. உரைகள்: யாசோதர காவியம், புறநானூறு, பதிற்றுப்பத்து, ஐங்குநுறூறு, நற்றிணை, சிவஞான போதம், திருவருட்பா முதலிய பல நூல்களுக்கு உரை வழங்கினார்.

★ மா.இராசமாணிக்கனார்(1907 - 1967)

**ஊர் தஞ்சாவூர் :** சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் பணியாற்றியுள்ளார். நூல்கள் : மொகஞ்சதாரோ, பல்லவர் வரலாறு, சோழர் வரலாறு, தமிழக ஆட்சிக்கலைகள் வரலாறு, தமிழர்: நாகரிகமும் பண்பாடும், தமிழர் திருமணத்தில் தாலி, பத்துப்பாட்டு ஆராய்ச்சி, கம்பர்யார், திருவள்ளுவர் காலம் முதலிய நூல்கள்: தமிழ்கற்பிக்கும் முறை, பழந்தமிழ், தொல்காப்பியம் ஆராய்ச்சி விளக்கம், இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்.

★ சி. இலக்குவனார் (1910 - 1973)

நாகர் கோயில் இந்துக் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றியவர். தனித்தமிழ் நெறியாளர். 1965இல் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டார். அதனால் பதவி பறிக்கப்பட்டது. பின் சென்னை மாநிலக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியரானார். நூல்கள்: **தமிழ் கற்பிக்கும் முறை, பழந்தமிழ், தொல்காப்பியம் ஆராய்ச்சி விளக்கம், இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்.**

★ தா.ஏ. ஞானமூர்த்தி

1911இல் பிறந்தார். குன்றக்குடி அடிகளார் **'நூலறிவு புலவர்'** எனும் பட்டம் வழங்கினார். நூல்கள் : சிந்தாமணிச் செல்வம், அடிசிற்கினியாள், அவல வீரர்கள், சமணம் முதலியன. அகில இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தைத் தோற்றுவித்தவர்களுள் ஒருவர்.

★ அ.ச.ஞானசம்பந்தன்

**பிறந்த ஆண்டு 1916,** மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத்தலைவராகப் பணியாற்றியுள்ளார். நூல்கள்: **இலக்கியக் கலை, இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும், அரசியர்மூவர், அகம், புறம், மகளிர் வளர்த்த தமிழ், கம்பன் புதிய பார்வை, தெள்ளாறு எறிந்த நந்தி முதலியன. 2000ஆம் ஆண்டில் குறள் பீடத்தின் பாராட்டும் பரிசும் பெற்றுள்ளார்.**



FUTURE VISION

★ **க.வெள்ளை வாரணர்**

ஊர் திருநாகேச்சுரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் பணியாற்றினார். நூல்கள்: சங்ககாலத் தமிழ் மக்கள், பன்னிரு திருமுறை ஆராய்ச்சி, தொல்காப்பிய உரைவளம் முதலியன.

★ **பொற்கோ**

**பிறந்த நாள் 09.06.1941.** ஊர் திருச்சி மாவட்டம் **இரும்புலிக் குறிச்சி.** மொழியியல் துறையில் முனைவர்ப் பட்டம் பெற்றவர். தமிழ் மட்டுமின்றித் தெலுங்கு. வங்காளம், மலையாளம், சப்பான் ஆகிய மொழிகளிலும் புலமை உடையவர். அமெரிக்கா, பிரிட்டன், சப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு மொழியராய்ச்சி தொடர்பாகச் சென்று வந்திருக்கிறார். 1970 - 72இல் இலண்டன் பல்கலைக் கழகத்தில் பணியாற்றினார். சென்னைப் பல்கலைக்ககழகத் தமிழ்த் துறைத் தலைவராயிருந்த இவர் 24.06.1999 முதல் 23.06.2002 வரை சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகப் பணியாற்றினார். இவர் மேற்பார்வையின் கீழ் 30 பேர் பி.எச்.டி பட்டமும் ஏறத்தாழ 100 பேர் எம்.ஃ.பில் பட்டமும் பெற்றுள்ளனர்.

**மொழியியல், தமிழ் இலக்கணம், ஒப்பிலக்கணம் தமிழ் இலக்கியக் கொள்கைகள், ஒப்பிலக்கியம், பாவியல் ஆகிய துறைகளில் வல்லுநர் பல ஆண்டுகளாகப் புலமை இதழின் பதிப்பாசிரியராக இருந்து வருகிறார்.**

**செந்தமிழ், மாற்றிலிக்கணம், இலக்கண உலகில் புதிய பார்வை, நீங்களும் பிழையின்றி எழுதலாம், பொற்கோவின் கவிதைகள் முதலிய முப்பதிற்கும் மேற்பட்ட நூல்களையும்,** நூற்றுக்கணக்கான மொழியாய்வுக் கட்டுரைகளையும் படைத்துள்ளார்.

தமிழ் மொழி, ஒப்பிலக்கணம், இலக்கியம், பண்பாடு ஆகியவை பற்றிய இவரது ஆங்கிலக் கட்டுரைத் தொகுப்பு(Tamil Studies) 2001) வெளிவர உள்ளது.

கோவை பூ.சா.கோ. கலைக் கல்லூரித் தமிழ்த் துறைத்தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். படைத்த நூல்கள் 1. தமிழ் நூல்களில் குறிப்புப் பொருள், சங்ககாலம், சங்ககாலத்திற்கு முன், சிலப்பதிகாரச் செய்தி, முதற்காப்பியச் சிந்தனை, இராமாயணச் சிந்தனை, திரு.வி.க., மாதவி முதலிய ஆராய்ச்சி நூல்கள் 2. மண்ணிலும் விண்ணிலும், அசாமிய இலக்கிய வரலாறு, தூயர் பிரான்சிஸ் அசிச - மகாத்மா காந்தி ஒப்பிட்டாய்வு முதலிய மொழி பெயர்ப்பு நூல்கள் முப்பதிற்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார்.

★ **இ. சுந்தரமூர்த்தி**

2001 ஆம் ஆண்டுக்குரிய திருவள்ளுவர் விருது தமிழக அரசால் இவருக்கு வழங்கப்பட்டது. தமிழ்ப பல்கலைக்கழகத் துணை வேந்தராய்ப் பதவி ஏற்றுள்ளார். திருக்குறள் யாப்பமைதியும் பாடவேறுபாடும், திருக்குறள், நடையியல், பாரதி நடையில், நடையியல் அறிமுகம் முதலிய ஐம்பதிற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

**தமிழில் உரைநடை வளர்ச்சி**

தன் எண்ணங்களை வெளிப்படுத்த மனிதன் பேச்சு மொழியைப் படைத்துக்கொள்வதற்கு முன்னால் தன் உணர்ச்சிகளைப் பாட்டின் மூலம் தெரிவித்துக்கொண்டான்: என்ற மொழி நூலறிஞர் ஜெஸ்பர்ஸன் குறிப்பிடுகின்றார். இதனால் ஒரு மொழியில் செய்யுளே உரைநடைக்கு முன் வழங்கியிருக்க வேண்டுமென்பது வெளிப்படை. ‘இலக்கிய வரலாற்றில் கவிதையே உரைநடைக்கும் முற்பட்ட காலத்தாகும்’ என்று அறிஞர் எமர்சன் கூறியிருப்பதும் இக்கருத்துக்கு அரண் செய்வதாகும். தமிழில் ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் உரைநடை அமைந்திருக்கவில்லை என்ற கூற்று முழுவதும் கொள்ளக் கூடியதன்று: ஐரோப்பியர் தொடர்பால் ‘உரைநடை’ என்ற இலக்கியப் பிரிவு தனிக்கலையாய் வளர்ந்தது எனலாம். உரைநடை வளர்ச்சியினையும் வாழ்வினையும் பெற்றது அவர்களால் எனலாம். தொல்காப்பியத்திலேயே உரைநடையைப் பற்றிய குறிப்பினைக் காண்கிறோம். உரைநடையும் செய்யுளம் கலந்த நூல்கள் அக்காலத்தில் எழுந்திருந்தன என்பதே அக்குறிப்பாகும், இதனை.

**தொன்மை தானே**
**உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே’**

என்று தொல்காப்பியனார் செய்யுளியலில் குறிப்பிடுகின்றார். இதனை ‘உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்’ என்று அக்காலத்தில் வழங்கினர். பெருந்தேவனார் பாரதமும், தகடூர் யாத்திரையும் இவற்றிற்குச் சான்றுகளாகப் பழைய உரை நூல்களில் காட்டப்படுகின்றன. மேலும், தொல்காப்பியனார்,

**‘அங்கதம் முதுசொலொ டவ்வேழ் நிலத்தும்’**



FUTURE VISION

என்று பொருளியலிலும் ஒரு நூற்பாவினை அமைக்கிறார். இந்நூற்பா, நூல் புணர்க்கும் முறை ஏழு பிரிவென்றும் அவற்றில் ஒன்று ‘உரையாப்பு’ வகை என்றும் விதந்தோதுகிறது. அவ்வுரைநடையினை நான்கு வகையாக அவரே பிரித்துரைக்கிறார்.

**‘பாட்டினை வைத்த குறிப்பி னானும்**
**பாவின் றெழுந்த கிளவி யானும்**
**பொருண்மர பில்லாப் பொய்ம்மொழி யானுமென்று**
**உரைவகை நடையே நான்கென மொழிப’.**

இதனால், உரைநடையும் செய்யுளும் கலந்துள்ள நூல்களும், பாட்டிற்கு உரையாகக் கூறப்படும் உரை நூல்களும், ஒரு பொருளின்றிப் பொய்படத் தொடர்ந்து சொல்லும் நவீனங்களும், நகுதற்கு ஏதுவாகிய நாடகங்களும், சிறுகதைகளும் உரைநடை நூல்களாம் என்பது பெறப்படுகின்றது.

சிலப்பதிகாரத்தில் செய்யுள்களுக்கு இடையில் செய்யுள்களுக்கு இடையில் சில இடங்களில் உரைநடை விரவி வருவதனைக் காணலாம். இறையனார் அகப்பொருள் உரையில் சிறிது கடினமான நடையில் அமைந்த உரைநடை காணப்படுகிறது. இடைக் காலத்தில் வடமொழியில் கலந்த தமிழ் உரைநடையினைச் சமண ஆசிரியர் சிலர் ‘மணிப்பிரவாளம்’ என்னம் நடையில் எழுதினர் என்று ஸ்ரீ புராணம், கத்திய சிந்தாமணி முதலிய நூல்களால் அறியலாம். பதினான்காம் நூற்றாண்டில் தொல்காப்பியம், சங்க நூல்கள், சங்கம் மருவிய கால நூல்கள் முதலியவற்றிற்கு உரையெழுதிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், பேராசிரியர், சேனாவரையர், பரிமேலழகர் முதலியோர் திட்பமான செறிந்த உரைநடையினை எழுதியுள்ளனர். வைணவ உரையாசிரியர் நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்திற்கு மணிபிரவாள நடையில் உரை செய்தனர். சைவ சித்தாந்த சாத்திரங்களுக்கும் சைவ சமயப் புலவர் உரை கண்டுள்ளனர். அக்காலத்திலும் செய்யுள் அமைப்பே உரைநடையினும் இலக்கியத்தில் பெரிதும் பயிலப்பட்டது எனலாம். ‘இலக்கியம், இலக்கணம், சோதிடம், மருத்துவம், நிகண்டு முதலிய அனைத்து நூல்களும் செய்யுள் நூல்களாகவே துலங்கின. அக்காலத்தில் பனையேடுகளில் இரும்பெழுத்தாணிகொண்டு எழுதினர். இது, இக்காலத்தில் தாளில் பேனாவால் எழுதுவது போன்ற எளிய செயலன்று, ‘சுரங்கச் சொல்லி விளங்க வைத்தல்’ என்ற முறையால் தான் அந்த இடர்ப்பாடு களையப்பட முடிந்தது. ஒரு கருத்தை உரைநடையில் சொல்வதைவிடச் செய்யுளில் சொல்வதால் காலச் சுருக்கத்தையும் முயற்சி எளிமையையும் பெற இயலும், அச்சுப் புத்தகங்கள் இல்லாத காலமாதலால் நூல்களைப் பயில்வதற்கும், பயிற்றுவதற்கும் மனத்தில் கொள்வதற்கும் மனப்பாடம் செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. செய்யுளை மனப்பாடம் செய்வதே எளிய விரைந்த செயல். இவ்வாறான காரணங்களால் செய்யுள் வழக்கே ஐரோப்பியர் வருகைக்கு முன் பெருவழக்காயிருந்தது. இதே நிலைமையினை ஐரோப்பியர் நன்கு குறிப்பிட்டுள்ளனர். தமிழர் உரை எழுதும் பழக்கம் இன்னும் தொடக்க நிலையில் இருக்கிறது. விரைவாகவும் சரமாரியாகவும் கவிபாடக்கூடிய புலவர் உரைநடையிற் சில சொற்றொடர்கள் எழுதத் தெரியாமலிருக்கின்றனர்’ என்னும் கருத்துப்பட வின்ஸ் லோவின் தமிழ் ஆங்கில அகராதியின் முகவுரையில் எழுதப்பட்டிருக்கிறது. ‘மருத்துவம், கணிதம், இலக்கணம், நிகண்டு முதலிய எல்லா நூல்களும் (அவற்றின் உரைகளைத் தவிர) செய்யுளிலே இயற்றப்பட்டிருக்கின்றன. ‘உரைநடையில் நூல் இயற்றும் வழக்கம், ஐரோப்பியரின் தொடர்பால் ஏற்பட்டதாகும்’ என்று தமிழைப் பற்றி மர்டாக் துரை எழுதியிருக்கிறார்.

மேலே கூறப்பட்டு வந்த கருத்துகள் பொருந்து மாற்றினைப் பின்னர்க் காண்போம். உரைநடை நூல்கள் மட்டுமன்றி வேறு பல மாற்றங்களும் ஐரோப்பியர் வருகையால் விளைந்தன. ‘தமிழ் எழுத்துகளை எளிமையாக்கினர். பல சொற்கள் அமைந்த தொடரினை (வாக்கியத்தை) ஒரே நீண்ட சொல்லால் ஆன தொடர் போல எழுதி வந்த பழக்கத்தினை மாற்றிச் சிறிய வாக்கியமாயிருப்பினும் பெரிய தொடராயிருப்பினும் சொற்களின் இடையிடையே இடம் விட்டு எழுதுகின்ற முறையினை அவர்கள் புகுத்தினர். துண்டுத்தாள்களையும், புத்தகங்களையும், செய்தித் தாள்களையும் அச்சியற்றிய முதல்வர் அவர்களே. பண்பாட்டில் உயர்ந்த உலகின் பிற பகுதிகளில் தமிழ்மொழி படிக்கப்பெறும் ஆர்வத்தினை அவர்களே ஊட்டினர். ஐரோப்பிய மொழிகளிலிருந்து சில நூல்களை முதன்முதலில் தமிழில் மொழி பெயர்த்தனர்: தமிழ்ச் சொற்கோவையினை மனப்பாடம் செய்யும் பழைய பழக்கத்திற்கு அகராதிகளையும் சதுரகராதிகளையும் இயற்றி முற்றுப்புள்ளி வைத்தனர்: இயற்கை, விஞ்ஞானம் பற்றிய கட்டுரைகளை வரைந்தனர்: தமிழறிந்த அறிஞர்களைத் தமிழ் நூல்கள் வெளியிடத் தூண்டினர்: மொழி, இலக்கியம், இலக்கணம், இவைகளை நுணுகி ஆயும் திறனுக்கு வழி காட்டினர்: எல்லோரும் புரிந்து கொள்ள இயலாத நிலையில் ஒரு மொழி அமைந்திருப்பது நல்லதன்று என்று கூறி, உரைநடை இலக்கியம் தங்களுக்கென்று இல்லாதவர்கள் சமுதாயம், ஒழுங்கு, சமயம், அரசியல், பொருளாதாரம், முதலிய துறைகளில் முன்னேற முடியாதென்றும் எடுத்துக்காட்டினர். அம்மட்டோடு அமையாது நவீனத் தமிழ் உரைநடையினைப் பேசவும் எழுதவும் படிக்கவும் ஆனதொரு பழக்கத்தினைக் கற்பித்தனர். இவ்வாறு ஐரோப்பியர்களால் விளைந்த நன்மைகளையெல்லாம் கிறித்துவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராய் விளங்கி மறைந்த சற்குணர் அவர்கள் விரிவாகக் கூறியுள்ளார்.


FUTURE VISION

இந்தியாவிலுள்ள மொழிகளுள் உரைநடை நூல் முதன் முதல் தோன்றிய பெருமை நம் தமிழ் மொழியினையே சாரும். அம்பலக் காட்டில் அச்சுப் பொறியினை அமைத்து அதன் பயனாய்க் ''கிருத்துவோபதேசம்' என்னும் தமிழ் நூல் கி.பி 1577 இல் வெளியாயிற்று. மாறுபட்ட கருத்தும் உண்டு. 'பெஸ்கி' என வழங்கும் வீரமாமுனிவர் பதினெட்டாம் நூற்றாண்டில் உரைநடையினைப் பெரிதும் வளர்த்தனர். யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் உரைநடை நூல்களை, அச்சியற்றி வெளியிட்டுச் சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கப் பாடுபட்டார். இவ்வாறு தமிழ் உரை நடை வித்து, கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் முளைத்து, பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் செடியாகி, பத்தொன்பதாம் நூற்றாண்டில் கனித் தந்து பலன் தருகின்றது.

**உரைநடையின் தோற்றமும் வளர்ச்சியும்**

மனிதன் தன் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்த கையாண்ட கருவியே மொழி. இம்மொழியிலும் முதன் முதலில் கவிதை அல்லது செய்யுள் நடையே பயன்படுத்தப்பட்டு வந்தது. மொழி நூலறிஞர்களான ஜெஸ்பர்ஸன், எமர்சன் போன்றோரும் இலக்கிய வரலாற்றில் கவிதையே உரைநடைக்கும் முற்பட்ட காலத்தாகும் என்ற கருத்து கொண்டவர்களாவர். இவ்வுரை நடை இலக்கியம் தமிழுக்குப் புதியதன்று. தொல்காப்பியர் காலத்திலேயே உரைநடை என்னும் பிரிவு இருந்தது என்பதை

**தொன்மை தானே**
**உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே**
**(தொல். செய்.229)**
**பாட்டிடை வைத்த குறிப்பினானும்**
**பாவின் நெழுந்த கிளவி யானும்**
**பொருண் மரபில்லாப் பொய்ம்மொழி யானும்**
**பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும் என்று**
**உரைநடை வகையே நான்கென மொழிப**

என்னும் நூற்பாக்கள் உணர்த்துகின்றன.

எனவே, அக்காலத்தில் தனி உரைநடை நூல்கள் இல்லையெனினும் செய்யுளும் உரைநடையும் கலந்த நூல்கள் இருந்தன என்பதும் உரைநடை எனும் பகுதியிலும் நான்கு வகை இருந்தன என்பதும் பெறப்படுகிறது.

உரைநடையும் இருந்தது என்பதேயன்றி செய்யுளே பெரிதும் பயன்படுத்தப்பட்டு வந்தது காரணம் அக்காலத்தில் பழக்கத்திலிருந்த எழுதுபொருட்களே பனைஓலையும் இரும்பு எழுத்தாணியும் பயன்படுத்துவற்குக் கடினமாக இருந்ததனால் சுருங்கச் சொல்லி விளங்க வைத்த கவிதை நடையே இத்துன்பத்திற்கு மாற்றுவழியாகத் திகழ்ந்தது. இலக்கியம், இலக்கணம், சோதிடம், மருத்துவம், நிகண்டு, ஆகிய அனைத்துமே செய்யுள் வடிவிலேயே இயற்றப்பட்டு வந்தன. எதுகையும், மோனையும் பொருந்த ஓசை நயத்துடன் மனப்பாடம் செய்வதற்கு எளிமையாய் இருந்த கவிதை இலக்கியமே பெரிதும் பழக்கத்தில் இருந்து வந்தது. அடுத்து வந்த உரைநடை கவிதையின் சிதைந்த வடிவம் என்றே கூறலாம்.

காலப்போக்கில் உரைநடையையும், செய்யுளையும் கலந்து கதை நூல்களை ஆக்கத் தொடங்கினர். இவற்றை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று குறித்தனர். இவ்வகையில் பெருந்தேவனாரின் பாரதம், தகடூர் யாத்திரை, சிலப்பதிகாரம் ஆகியவை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனப்படுகின்றன. பின்னர், பல்லவர் காலத்தில் வாழ்ந்த சில சமண முனிவர்கள் சரிக்குச் சரி அளவினதாக வடமொழியும், தமிழும் கலந்து எழுதப்படும் ஒரு புதிய உத்தியைக் கையாண்டனர். இது மனிப்பிரவாள நடை எனப்பட்டது. இந்நடையில் ஸ்ரீபுராணம், சத்திய சிந்தாமணி போன்ற வசன நூல்களை எழுதினர். இம்முறை வெற்றி பெறாது அழிந்ததாயினும் தமிழில் ஐ,ஸ,ஷ,ஹ,க்ஷ என்னும் ஐந்து சிறந்த எழுத்துக்களின் ஓசை புகுந்து கலப்பதையும் மிகுதியான வடசொற்கள் கலப்பதையும் இது இயல்பாக்கி விட்டது. இக்காலத்தே தோன்றியதாகக் கருதப்படும் இறையனார் களவியல் உரையில் சிறிது கடினமான நடையில் அமைந்த உரைநடை அமைந்திருப்பதைக் காணலாம். இதன் அமைப்புப் பொருளுணரக் கடினமாக இருந்தமையின், நக்கீரர் இதற்கு எளியதொரு உரை வகுத்தார். இதுவே காலத்தால் முந்திய உரை. ஆனால் இவ்வுரை ஏட்டில் எழுதப்படாமல் பல தலைமுறைகள் வரையிலும் வாய்மொழியாகவே வழங்கப்பட்டு வந்தது. பிறகுதான் இது எழுத்து வடிவம் பெற்றது. இது ஏறக்குறைய கி.பி. 9 ஆம் நூற்றாண்டளவில் ஏட்டில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். கவிதை வடிவிலான நூல்கள் மனப்பாடம் செய்வதற்கும் எழுதுவதற்கும் எளிதாக இருந்ததே தவிர பொருளறிந்து கொள்வதற்குக் கடினமாக இருந்தது. இத்துன்பமும் உரையாசிரியர்களால் நீக்கப்பட்டது.

இவ்வுரையாசிரியர்களே தமிழில் உரைநடை தோன்ற வழிகாட்டினர் எனலாம். இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், சேனாவரையர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர், முதலானோர் திட்பமான, செறிந்த உரை எழுதியதன் மூலம் உரைநடைத் தோற்றத்திற்கு வித்திட்டனர். இவர்கள் எழுதிய உரைகளை இன்று வழக்கத்திலிருந்து வரும் உரைநடை என்னும் பொருளில் வழங்க இயலாது. இவற்றை விளக்கஉரை என்றுதான் கூறவேண்டும்.

நம் நாட்டிற்கு வருகை தந்த ஐரோப்பியரின் வருகையால் தமிழ் இலக்கியம் மறுமலர்ச்சி பெற்றது. அந்நியர் வருகை அன்னைத் தமிழுக்கு அரியதொரு வரப்பிரசாதமாயிற்று. அச்சுப்பொறி அறிமுகமானது. அம்பலக்காடு, புன்னைக்காயல், கொச்சி முதலான இடங்களில் அச்சுக்கூடங்கள் நிறுவப்பட்டுப் பல நூல்கள் உரைநடையில் இயற்றும் வழக்கம் ஐரோப்பியர் தொடர்பால் ஏற்பட்டதாகும்.

சங்க காலத் தமிழ் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளில் தொடங்கி, இலக்கிய இலக்கணங்களுக்கு உரைவகுக்கும் பணியில் தொடர்ந்து அச்சு இயந்திர வருகையால் பாடப்புத்தகங்களாகவும் மொழி பெயர்ப்புகளாகவும் வளர்ந்து தற்கால உரைநடை நிலைக்கு உயர்ந்துள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் புலவர்களுள் பலர் உரைநடை எழுதினர்.

இலக்கண இலக்கிய உரையசிரியர்கள், ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம் பிள்ளை, இராமலிங்க அடிகள், உ.வே.சா கதிரேசன் செட்டியார் போன்றோரின் உரைநடைப் பணியை முன்னர்க் குறிப்பிட்டுள்ள உரையாசிரியர்கள், கிறித்தவர்களின் தமிழ்த் தொண்டு, யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் புலவர்கள் ஆகிய பகுதிகளில் கண்டு கொள்க.

### கா.சு. பிள்ளை (1885 – 1945)

முதன்முதலாக எம்.எல்.பட்டம் பெற்று எம்.எல்.பிள்ளை என்று வழங்கப்படும் சட்டநிபுணரே தமிழுலகம் போற்றும் திரு.கா.சு.பிள்ளை, கா.சுப்பிரமணிய பிள்ளையான இவர் சிறந்த சைவப் பற்றுமிக்கவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். சைவசமயக் குரவர் நால்வர் வரலாற்றைப் பழகு தமிழில் அழகுற எழுதியுள்ளார். இவரது ‘இலக்கிய வரலாறு’ நூல் சிறந்த ஆராய்ச்சி நூலாக விளங்குகிறது. தொல்காப்பியப் பொருளதிகாரம் அல்லது பழந்தமிழர் நாகரிகம் என்ற ஆய்வு நூலை எழுதியுள்ளார். என்கடன் பணிசெய்து கிடப்பதே என்ற உயரிய நோக்குடன் வாழ்நாள் முழுவதும் ஓயாது உழைத்தவர். கண்பார்வை குன்றி துன்புற்ற காலத்தும் நூல்இயற்றிய பெருமைக்குரியவர்.

### எஸ். வையாபுரிப்பிள்ளை (1888 – 1956)

தமிழ் நூற்பரப்பு முழுவதையும் கற்றுணர்ந்த பெரும் ஆராய்ச்சியாளர். ஏட்டுப்பிரதிகளைப் படித்துணர்ந்து பாட பேதங்களைக் கண்டு அறிந்து நூல் பதிப்பிப்பதில் சிறந்து விளங்கினார். சென்னை பல்கலைக் கழகத்தின் தமிழ்பேரகராதி இவர் தலைமையில் உருவானதே. புறத்திரட்டு போன்ற நூல்களைப் பதிப்பித்தார். தமிழ்ச் சுடர்மணிகள், தமிழர் பண்பாடு, இலக்கியச் சிந்தனைகள், காவிய காலம், இலக்கிய உதயம், தமிழ்மொழி வரலாறு (ஆங்கிலம்) முதலிய உரைநடை நூல்களையும் ஆராய்ச்சி நூல்களையும் எழுதியுள்ளார்.

### மறைமலையடிகள் (1883 - 1950)

நாகையை அடுத்த காடம்பாடியில் பிறந்தவர். தமிழ் வடமொழி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் ஆழ்ந்த புலமை பெற்றவர். வாழ்நாள் முழுவதும் சொற்பொழிவுகள் ஆற்றியும் ஆராய்ச்சிகள் செய்தும் ஆழ்ந்த கருத்துச் செறிவுமிக்க நூல்களை வெளியிட்டும் தமிழ்த் தொண்டு செய்து கழித்தவர்.

தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தவர்: சுவாமி வேதாசலம் எனும் தனது வடமொழி பெயரை மறைமலை அடிகள் என மாற்றி அமைத்துக் கொண்டவர்.

தான் நடத்திய ‘ஞான சாகரம்’ எனும் பத்திரிகையின் பெயரையும் ‘அறிவுக்கடல்’ என மாற்றியமைத்தவர். முதன்முதலாகச் சங்க இலக்கியங்களைத் தமிழ் மக்களிடையே பரப்பியதுடன் மேனாட்டக்குரிய முற்போக்குக் கருத்துக்களையும் ஆராய்ச்சி முறைகளையும் தமிழிற் புகுத்தினார்.

முல்லைப்பாட்டு ஆராய்ச்சி, குறிஞ்சிப்பாட்டு ஆராய்ச்சி, பட்டினப்பாலை ஆராய்ச்சி போன்ற ஆராய்ச்சி நூல்களையும் மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், தமிழர் மதம் திருவாசக விரிவுரை போன்ற பல நூல்களையும் எழுதியுள்ளார். சாகுந்தல நாடகத்தைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். வடமொழியை வெறுத்தாலும், வடமொழிநூலைச் சுவை குன்றாமல், தனக்கேயுரிய தன்னேரில்லாத் தமிழில் மொழிபெயர்த்துத் தமிழர்களும் வடமொழி காவியத்தைச் சுவைக்கும் படி செய்துள்ளார்.

சிறுவர்களுக்கான செந்தமிழ் என்ற பாடநூல்கள், ‘அறிவுரைக் கொத்த’ எனும் நூல் மட்டுமின்றிக் கட்டுரை எனும் தமிழ்ச் சொல்லையும் கட்டுரை எழுதும் முறைகளையும் மாணவர்களுக்குப் பரவலாக உணர்த்தியவர். நூக நாட்டரசி,கோகிலாம்பாள் கடிதங்கள் ஆகிய சிறந்த நாவல்களையும் எழுதியுள்ளார்.

தமிழில் மட்டுமின்றி ஆங்கில இதழான The ocean of Wisdom என்பதன் ஆசிரியராகத் திகழ்ந்ததுடன் Ancient And Modern Poet என்ற ஒரு ஆங்கில நூலையும் எழுதியுள்ளார். தன்மான இயக்கத்தின் முன்னோடியாகத் திகழும் இவரைத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் மறைமலை ஒரு பெரும்அறிவுச் சுடர்: தமிழ்நிலவு: சைவவான் என்றெல்லாம் பாராட்டியுள்ளார்.



FUTURE VISION

### திரு.வி.கல்யாண சுந்தரனார் (1883 – 1953)

திருவாரூர் - விருத்தாசலம் கல்யாண சுந்தரனார். துள்ளம் என்னும் ஊரில் பிறந்தார். யாழ்ப்பாணம் கதிரைவேற் பிள்ளையின் தமிழ் மாணாக்கர். மறைமலையிடம் இலக்கியமும், தணிகாசல முதலியாரிடம் சித்தாந்த சாத்திரமும் பயின்றார். வெஸ்லி கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். தேசபக்தன், நவசக்தி ஆகிய இதழ்களின் ஆசிரியராவார். முதன்முதலில் தொழிலாளர் சங்கத்தைச் சென்னையிலே தோற்றுவித்தார். சிறந்த சொற்பொழிவாளர்.

இவர் மனித வாழ்க்கையும் காந்தியாடிகளும், முருகன் அல்லது அழகு, சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து, பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை, சைத்திறவு போன்ற நூல்களை இயற்றியுள்ளார். இவரது சொற்பொழிவுகள் தமிழ்த் தென்றல் எனவும், பத்திரிக்கைத் தலையங்கங்கள் தமிழ்ச்சோலை எனவும் நூல்களாக வெளிவந்துள்ளன. உரைநடையில் எளிமையும் புதுமையும் புகுத்திய பெருமைக்குரியவர்.

### இரா.இராகவ ஐயங்கார் (1870 - 1948)

பாஸ்கர சேதுபதியின் அரசவைப் புலவராகத் திகழ்ந்தவர். செந்தமிழ் என்னும் மதுரைத் தமிழ்ச் சங்க இதழின் ஆசிரியர். பகவத் கீதை, சாகுந்தலம் ஆகிய நூல்களை மொழிபெயர்த்துள்ளார். சங்க இலக்கியக் குறுந்தொகைக்கு உரை எழுதியுள்ளார். பாரி வள்ளல் பற்றிக் கற்பனை வளம் மிகுந்த பாரிகாதை எனும் காப்பியம் ஒன்றை வெண்பா யாப்பில் படைத்துள்ளார்.

புவி எழுபது எனும் செய்யுள் நூல், வஞ்சிமாநகர், நல்லிசைப் புலமை மெல்லியலார், தமிழர் வரலாறு ஆகிய ஆராய்ச்சி நூல்களும் இயற்றித் தமிழ் உரைநடைக்குத் தொண்டாற்றினார்.

### மு.இராகவ ஐயங்கார் (1878 - 1960)

செந்தமிழ் என்னும் இதழுக்கு இளமையிலேயே ஆசிரியராகத் திகழ்ந்த இவர் கம்பராமணயத்தில் சிறந்த புலமை பெற்றுத் திகழ்ந்தார். தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, வேளிர் வரலாறு, சேரன் செங்குட்டுவன் சாசனத் தமிழ்க்கவி சரிதம் முதலியன இவர் இயற்றிய நூல்களாகும். மேலும் தமிழ்ச் சான்றோர் பலரின் ஆராய்ச்சி நூல்கள் வளரவும், உரைநடை ஆக்கம் பெறவும் காரணமாக இருந்தவர்.

**உரையாசிரியர்கள் பற்றிய தகவல்கள்**

தொல்காப்பியத்திற்கும் முன்பே தமிழில் உரைநடை இருந்தது. இதனை,

**"பாட்டிடை வைத்த குறிப்பி னானும்**
**பாவின்று எழுந்த கிளவி யானும்**
**பொருளொடு புணராப் பொய்மொழி யானும்**
**பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்**
**உரைவகை நடையே நான்கென மொழிப"**

என்று வருவதால் அறியலாம்.

பாட்டிடை வைத்த குறிப்பு : இராம சரிதம், பாண்டவர் சரிதம், சிலப்பதிகாரம் ஆகிய நூல்கள்.
பாவின்று எழுந்த கிளவி: நூலுக்கு எழுதப்பட்ட உரைகள்
பொய்ம்மொழி நகைமொழி இரண்டும் கதைகள்

**"தொன்மை தானே**
**உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே"**

என்று எண்வகை வனப்பில் ஒன்றான தொன்மை குறித்துத் தொல்காப்பியர் கூறியுள்ளார்.
உரையிடையிட்டப் பாட்டுடைச் செய்யுள் என்று சிலப்பதிகாரம் குறிக்கப்படுகிறது.

**"உரையும் பாட்டும் உடையோர் சிலரே**
**மரையிலை போல மாய்ந்தோர் பலரே"**

என்று புறநானூறு கூறுகிறது.
செய்யுளுக்கும் உரைநடைக்கும் இடைப்பட்ட நடையில் எழுதப்பட்டவை மெய்கீர்த்திகள்.
அரசனின் வெற்றியையும் வீரத்தையும் கூறுவன மெய்க்கீர்த்திகள்.
சிற்றிலக்கிய வகையுள் ஒன்று மெய்க்கீர்த்தி
தொன்னூல் விளக்கம் தவிர மற்ற பாட்டியல் நூல்கள் மெய்க்கீர்த்தியைச் சிற்றிலக்கிய வகையுள் ஒன்றாகக் கூறுகின்றன.

**"திருமகன் போலப் பெருநிலச் செல்வியும்**
**தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்**
**காந்தளூர்ச் சாலை கலம் அறுத்து அருளி,**
**வேங்கை நாடும் கங்கை பாடியும்**
**தடிகை பாடியும் நுளம்ப பாடியும்**
**குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்**
**முரட்டு எழில் சிங்களர் ஈழ மண்டலமும்**
**இரட்ட பாடி ஏழரை இலக்கமும்**
**முன்னீர்ப் பழந்தீவு பன்னீ ராயிரமும்**
**திண்திறல் வென்றித் தண்டாற் கொண்ட**
**தன்எழில் வளர்ஊழியுள் எல்லா யாண்டும்**
**தொழுதக விளங்கும் ஆண்டே செழியரைத்**
**தேசுகொள் கோ ராசகேசரி பன்மரான ஸ்ரீராசராச**
**தேவர்க்கு யாண்டு இருப்பத்தொன்பது"**

என முதலாம் ராஜராஜ சோழனின் மெய்கீர்த்தி வருகிறது.

தமிழில் தோன்றிய முதல் உரை: இறையனார் களவியலுக்கு நக்கீரர் எழுதிய உரை: இது 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

- உரையை வளர்த்தவர்கள் சமணர்கள்
- உரையை உரைநடையாக்கியவர்கள் கிறித்தவர்கள்
- உரைநடையைத் தனி இலக்கியமாக வளர்த்தவர்கள் கிறித்தவர்கள்
- உரைநடை என்ற வகை தோன்றிய முதல் மொழி தமிழ்
- உரைநடையின் தந்தை வீரமாமுனிவர். ராபர்ட் - டி - நோபிலி என்றும் சிலர் கூறுவர்
- உரையாசிரியர்கள் காலம் 13-18 நூற்றாண்டு
- உரைநடை மறுமலர்ச்சிக் காலம் 19 நூற்றாண்டு
- உரைநடையின் பொற்காலம் 20 ஆம் நூற்றாண்டு
- 19 ஆம் நூற்றாண்டின் 'உரைநடை இளவரசு' தாண்டவராய முதலியார்.
- 19 ஆம் நூற்றாண்டின் 'உரைநடை வேந்தர்' ஆறுமுக நாவலர்
- இக்காலத் தமிழ் 'உரைநடையின் தந்தை' ஆறுமுக நாவலர்
- பழைய இலக்கண இலக்கியங்களுக்கு உரை எழுதி அவற்றை அழியாமல் காத்தவர்கள் உரையாசிரியர்கள்
- தமிழின் முதல் உரை ஆசிரியர் நக்கீரன்
- 'உரையாசிரியர் என்று சிறப்பாகக் குறிக்கப்படுகிறவர் இளம்பூரணர்.

## இளம்பூரணர்

- இலக்கண உரையாசிரியர்
- தொல்காப்பியம் முழுமைக்கும் முதலில் உரை கண்டவர்
- இவர் உரை 'இளம்பூரணம்' எனப்படுகிறது
- உரையாசிரியர் என்ற சிறப்புக்கு உரியவர்
- சமணத் துறவி
- 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்
- தந்தை மணக்குடி இளம்போதியார்
- கொங்குவேள் மாக்கதை (பெருங்கதை) திருக்குறள் ஆகியவற்றுக்கும் உரை எழுதியவர்
- திருக்குறளுக்கு இவர் எழுதிய உரை மணக்குடவார் உரை எனப்படுகிறது என்பர்.
- அம், பல் என வரூஉம் பெயரால் இறுதி என்ற தொல்காப்பிய நூற்பா ஐ - தாமரை, அம் - வெள்ளம், பல் - ஆம்பல் என்ற பேரெண்களைக் குறிக்கிறது என்று தெளிவுபடுத்தியவர்.
- இ, ஈ, ஐகளுக்கு 'ய்' என்பதும் பிற உயிர்களுக்கு 'வ்' என்பதும் உடம்படு மெய்யாக வரும் என்று முதன்முதலாகத் தெளிவுபடுத்தியவர்
- இக்கருத்தைப் பின் வந்த நன்னூலார் தம் நூலில் அப்படியே ஏற்றுள்ளார்.
- தமிழ் மட்டுமே அறிந்த இளம்பூரணர்' என்று இவரை சிவஞான முனிவர் குறித்துள்ளார்.
- 'உளங்கூர் கேள்வி இளம்பூரணர்' எனப் புகழப்படுகிறார்.

## சேனாவரையர்

- இலக்கண உரையாசிரியர்



FUTURE VISION

- படைதளபதியாகப் பணியாற்றியவர்
- தென்பாண்டி நாட்டு மாறோக்கத்தைச் (திருநெல்வேலி மாவட்டம்) சார்ந்த ஆற்றுரைச் சேர்ந்தவர் என்பர்.
- சைவ சமயம்
- 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்
- வடமொழி இலக்கணப் புலமை மிக்க உரையாசிரியர்.
- தர்க்க நடையில் உரை கண்டவர்
- மாணவர்களின் வினாக்களுக்கு விடை கூறுவது போன்று உரை கண்டவர்.
- இவர் தொல்காப்பியம் சொல்லாதிகாரத்திற்கு எழுதிய உரை சேனாவரையம் எனப்படுகிறது.
- சொல்லுக்குச் சேனாவரையும் எனச் சிறப்பிக்கப்படுகிறது. வடநூற்கடலை நிலைகண்டு உணர்ந்த சேனாரையர் என்று இவரைப் புகழ்ந்தவர் சிவஞான முனிவர்.

**நச்சினார்க்கினியர்**

- இலக்கணம், இலக்கியம் என்ற இரண்டிக்கும் உரை கண்டவர்
- மதுரையில் பரத்துவாச கோத்திரத்தில் பிறந்த அந்தணர்
- நச்சினார்க்கினியர் என்பது சிவனின் பெயர்களுள் ஒன்று
- நச்சர் என்று சுருக்கமாகக் குறிக்கப்படுகிறார்
- 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்
- திருக்குறள் உரையாசிரியர் நச்சர் என்பவர் வேறு
- தொல்காப்பியம், சீவகசிந்தாமணி, பத்தப்பாட்டு, கலித்தொகை, குறுந்தொகையின் கடைசி 20 பாடல்கள் ஆகியவற்றுக்கு உரை எழுதியவர்.
- குறுந்தொகை உரை கிடைக்கவில்லை
- இவர் தொல்காப்பியத்திற்கு எழுதிய உரை 'நச்சினார்கினியம்' எனப்படுகிறது
- சீவகசிந்தாமணிக்கு இருமுறை உரை கண்டார் என்பர்
- முதல் உரையை சமணர்கள் ஏற்கவில்லை என்பர்.
- பாடல் அடிகளை ஒடித்து விரும்பும் இடத்தில் ஒட்டி உரை கண்டவர் நச்சினார்க்கினியர்
- 'உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர்' என்ற சிறப்புக்கு உரியவர்.
- நச்சினார்க்கினியர் முதலியோர் போல யாம் பிடித்ததே சாதிப்போம் என்று இவரைப் பற்றி சிவஞான முனிவர் குறித்துள்ளார்.

**பேராசிரியர்**

- தொல்காப்பியம் பொருளதிகாரத்திற்கு உரை கண்டவர்
- இயற்பெயர் தெரியவில்லை
- சைவ சமயத்தவர்
- 12 ஆம் நூற்றாண்டினர்
- பொருளதிகாரத்தின் கடைசி நான்கு இயல்களுக்கு (மெய்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல்) மட்டுமே இவர் உரை கிடைத்துள்ளது.
- 'என்றான் ஆசிரியன்' என்று நூலாசிரியரை ஒருமையில் கூறும் ஒரே உரையாசிரியர் இவர் மட்டுமே.
- நண்டுக்கு மூக்குளதோ எனின் ஆசிரியன் கூறலின் உண்டு' என்று தம் நம்பிக்கையை வெளிப்படுத்தியவர்
- மாணிக்கவாசகரின் திருக்கோவைக்கு விளக்க உரை கண்டவர். குறுந்தொகை முதல் 380 பாடல்களுக்கு உரை கண்டவர். இவ்வுரை கிடைக்கவில்லை.
- 800 ஆண்டுகளுக்கு முன்பே 'பேராசிரியர்' என்று போற்றப்படக்கூடிய அளவுக்கு பேரறிவு படைத்தவர்
- தொல்காப்பியம் முழுமைக்கும் உரை கண்டவர்கள் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், புலியூர்கேசிகன்
- சொல்லதிகாரத்திற்கு மட்டும் உரை கண்டவர்கள் சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடர்
- பொருளதிகாரத்திற்கு மட்டும் உரை கண்டவர் பேராசிரியர்.

**மயிலை நாதர்**

- நன்னூலின் முதல் ஆசிரியர்
- சமணர்
- 14 ஆம் நூற்றாண்டினர்
- இவர் உரையை மறுக்கும் முகமாகவும் விளக்கும் முகமாகவுமே பிற்கால நன்னூல் உரைகள் தோன்றின.

FUTURE VISION

# MATERIAL தேவைக்கு

**TNPSC: GR –I & II (P), GR –IV**

**(TAMIL & ENGLISH MEDIUM),**

**PG: TRB - TAMIL, ENGLISH,**

**MATHS & COMPUTER SCIENCE**

**TET (P1 & P2),**

**CONTACT -90420 30163**

*******************************************************

**FUTURE VISION STUDY CENTRE**

**2ND FLOOR, AVK MARUTHI PLAZA,**

**OPP. HOTEL LAKSHMI PRAKASH,**

**SKS HOSPITAL ROAD,**

**SALEM – 636 004**